# எரிக்கப்பட்டாள்

எழுதியது :

## சத்தியவாணிமுத்து

வெளியிடுவோர் :

**மதி மன்றம்**

38, பிடாரியார் கோவில் தெரு, சென்னை-1.

முதற்பதிப்பு ஜூன் 1955 வெளியீடு 1

# மன்றம் பேசுகிறது

பிரன்சு நாட்டு வீராங்கனை ஜோன்-ஆப்-ஆர்க்கின் வீரவரலாற்றை எழுச்சிமுரசாம் **திருமதி சத்தியவாணிமுத்து** அவர்கள் சுவைமிக்க நடையில் தீட்டித்தந்துள்ளார்கள்.

படையைக்கண்டு தொடைநடுங்கும் கோழைகளல்ல பாவையர். அவர்கள் வீரத்தின் பிறப்பிடம், வெற்றியின் வாரிசு. பாராளவும் தெரியும்—படை நடத்தவும் முடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறது அவரது இந்நூல்.

விடுதலைப்போராட்டத்தில் விரைந்து நடைபோடும் தமிழகத்திற்கு பெரிதும் பயன்தரும் என்ற நோக்குடன் இந்நூலை எங்கள் முதல் வெளியீடாக அளிக்கிறோம்.

ரெ. நடேசன்

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை-1.

# எனது எண்ணம்

உலக வரலாற்றுப் புத்தகத்தைப் புரட்டினல் கொள்கைக்காக தியாக பலிபீடத்திலே குருதி கொட்டியவர்களை— இன்னுயுரை அர்ப்பணித்தவர்களை—கொடுமைகளைத் தாங்கிக்கொண்டவர்களை—தூக்கிலே தொங்கியவர்களை— அடக்குமுறை அக்கிரமங்களை ஆரத்தழுவியவர்களை— விஷம் தரப்பட்டு உயிர் விட்டவர்களைக்காணலாம் ஒவ்வொரு ஏட்டிலேயும்!

அவர்களெல்லாம் 'தியாகிகளாக' மறக்கமுடியாத வீரர்களாக பரிணமிக்கிருர்கள். உலக சரித்திரத்தில்— மக்கள் மன்றத்தில்!

ஜோன்! பிரஞ்சு நாட்டின் வரலாற்றில் ஒரு விடிவெள்ளி—திருப்பு முனை. பிரஞ்சு தந்த வீராங்கனை— மாதர் குலத்தின் மாசறுபொன்—மங்கை குலத்திற்கே மதிப்பை உண்டாக்கிய மாணிக்கம். அவள் மதிப்பு பெற்ருள்—மறுமலர்ச்சி வீராங்கனையாக அல்ல; மதத்தின் புனிதத்தன்மை பெற்றவளாக! தியாகியாக அல்ல; திருச்சபை 'அர்ச்சிஷ்ட அடியாளாக'! ஆனல் அவள் மதத்தை எதிர்த்தாளா? இல்லவே இல்லை! ஆண்டவனைப் பழித்தாளா? அதுவும் அவள் செய்யவில்லை.

'ஆண்டவனைத் தொழவும் அவர்தம் ஆசிபெறவும் அடியார்க்கு உரிமை உண்டு. அவரது அருள் அவர்களுக்கு நேராகவே கிடைக்கும் அதற்கு தேவாலயம் என்ற தனி தபாலாபீஸ் தேவையில்லை. அது ஆண்டவனும் விரும்பாத ஓர் கொடுமை' என்பதே அவளது உறுதியான கொள்கை.

'ஆண்டவனிடம் நான் நீங்காத பற்றுக்கொண்டேன், அவரது பேராட்சியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தேன்— நிறைவேற்றினேன்.

வீழ்ச்சியுற்ற தாயகத்தை மீட்டேன்; ஓடி ஒளிந்த சார்லஸ் டாபீனைத்தேடிப்பிடித்து முடி சூட்டினேன்.

ஆண்டவனுக்கு முதலிடம் தந்தேன். அவருக்குக் கீழ்படிய மதக்குருக்களிடமிருந்து யாதொரு அனுமதிச்சீட்டும் பெறவேண்டிய அவசியமில்லை' என்று கண்டிப்பாக கலக்கமின்றி, கடும் எதிர்ப்புக்கிடையில் கூறினாள். அதன் விளைவால்தான் அந்த வீராங்கனை எரிக்கப்பட்டாள் வெந்தணலில்.

எந்த மதம் அவளைக் குற்றவாளியாகக் கருதியதோ— எந்த மதகுருக்கள் -அவளின் வாழ்வில் களங்கத்தை கற்பித்து, கரை ஏற்படுத்த எரித்தார்களோ...அவர்களே அவள் மக்கள் மன்றத்தில் ஒரு 'சாக்ரடீஸாக'—'நெப்போலியனாக' ஒளி வீசக்கூடாது என்ற வஞ்சக எண்ணங்கொண்டு அவளை மதத்தின் புனிதத்தன்மை பெற்றவளாக ஆக்கிவிட்டனர். ஆனால் அவளோ மறுமலர்ச்சி இயக்கத்தின் மங்கா புகழ் விளக்கு.

சூது நினைப்புக்கொண்டவர்களால்-சித்திரப்புரட்டர்களால்-மதத்தரகர்களால் மறைக்கப்பட்ட ஜோனின் வாழ்வை-வரலாற்றை பட்டவர்த்தனமாகப்படம் பிடித்துக் காட்டவேண்டுமென்ற துணிவில்—தூய எண்ணத்தில் மலர்ந்ததுதான் எனது "எரிக்கப்பட்டாள்" என்ற இந்த உண்மை வரலாறு; ஜோனின் உயிர் ஓவியம்.

சென்னை-1.
1—5—55

சத்தியவாணிமுத்து

# எரிக்கப்பட்டாள்

## ஜோன்

"பைத்தியக்காரி! பதினறு வயது நிரம்பப் பெறுத நீ, அதிலும் படிக்கத் தெரியாத பட்டிக்காட்டுப் பாவை, நாட்டு விடுதலைக்குத் திட்டம் தீட்டுவதா? மூட்டாள் தனமான—வேடிக்கைக் குரிய—கேலிக்கூத்தான இந்தத்திட்டம் பயங்கரமானது. இதனை நீ கைவிடத்தான் வேண்டும். நீரில் மூழ்கடித்துக்கொன்றாலும் கொல்லுவேனே தவிர உனது வெறுக்கத்தகுந்த கருத்திற்கு ஒருக்காலும் இசையேன்'' என்று உறுமினர் ஆத்திரத்தில் அலறித்துடித்த என் தந்தை ஜாக்கஸ்—டி—ஆர்க்.

ஆம்! பைத்தியக்காரிதான். அத்துடன் கொஞ்சம் அவசரக்காரியுங்கூட. அள்ளியணைத்த என் அருமைத் தாயைப் பிரிந்து—பாசமிக்க தந்தையின் சொல்தட்டி—உடன் பிறந்தோரையும் உடனிருந்து வாழ்ந்த உற்றாரையும் உதாசீனம் செய்து, தன்னந் தனியாய் அதுவும் தொலைதூரம், முன்பின் தெரியாத இடத்திற்கு, பழக்கமற்ற பொறுப்பைத் தாங்கி, கிளம்பத் துணிந்துவிட்ட என்னைப் பைத்தியக்காரி என்று தான் உலகம் கூறும். என்ன செய்வேன்? ஒரு வகையிலே நான் பைத்தியக்காரி தான்! நாட்டுப் பற்றுக்குப் பெயர் "பைத்தியம்" என்றால் நான் பைத்தியக்காரி பட்டத்தை விலக்க முயற்சிப்பது தான் எப்படிப் பயன் தரும்? நான் சூளுரை எடுத்தேன். எனது சூளுரை

மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்க்குக் கேலிக்குரியதாக இருக்கலாம். நான் மன்றுடிக் கேட்டுக்கொள்கிறேன். தயை செய்து என் கதையைக்கேளுங்கள். என் இதயத் துடிப்பைக் கேட்டுச் சிந்தியுங்கள்.

நான் ஒரு பிரஞ்சுப் பெண். பிரான்ஸ் நாட்டில் லொரேய்ன் மாகாணத்தில் உள்ள டோம்ரெமி எனது கிராமம். 1412-ம் ஆண்டு பிறந்தேன். எனது தந்தையின் பெயர் ஜாக்கிஸ்—டி—ஆர்க். தாயின் பெயர் இசபெல்ரோமி. நாங்கள் செல்வத்திலே புரள்பவர்களுமல்ல—மாருக வறுமையிலே வாடுகிறவர்களுமல்ல. ஏதோ வாழ முடியும் என்ற நிலையிலே உள்ளவர்கள். என் தந்தைக்குச் சமுதாயத்திலே நல்ல செல்வாக்கு இருந்தது. கோடை காலத்தின் மாலை நேரங்களிலே அன்றுட வேலை முடிந்து ஊரார் ஓர் பொது மன்றத்திலே கூடும் போது எனது தகப்பனர் அந்தக்குழுவிற்குத் தலைமை தாங்குவது வழக்கம். என் தந்தைக்கு நல்ல மதிப்புக்கொடுத்து வந்தார்கள். அவர் நல்ல கொள்கையுடையவர். மனத்திட்பம் கொண்டவர். மதக்கோட்பாடுகளிலே அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. என் தாயும் தந்தையையே பின்பற்றினுள். நானும் எந்த வகையிலும் சளைத்தவளல்ல என்பது தான் என் திடமான கருத்து. என் தந்தை கூறியதைப்போல் நான் எழுதப்படிக்கத் தெரியாதவள். ஆனுல் பின்னல் வேலை எனக்கு நன்ருகத் தெரியும். மற்ற நேரங்களில் என் தந்தைக்குத் துணையாக ஆடு மாடுகளை மேய்த்து வருவேன்.

டோம்ரெமி ஓர் வேடிக்கையான கிராமமாகும். லொரேய்ன் மாகாணத்தின் எல்லையில் அமைந்திருந்தது. அந்த மாகாணத்தை ஆண்ட டியூக் (சிற்றரசு) பர்தண்டி மாகாண

சிற்றரசுக்குத் தோழனாக இருந்தான். என் பிறந்தகம் லொரேய்ன்—பர்கண்டி இரண்டிற்கும் இடையில் இருந்ததால் ஆண்டு தோறும் எனது பகுதியைப் பாதித்த தொல்லைகளைப் பற்றி நான் நன்றாக உணர முடிந்தது. டோம்ரெமி கிராமத்தின் வரி விதிப்பு முறை சற்றுக்கடுமையானதாகும். அந்த வரிகளிலிருந்து மக்கள் விடுவிக்கப் படுவது எனக்கு மிகவும் அவசியமாகப்பட்டது.

எனது பன்னிரண்டாவது வயதிலேயே நான் சிற் சில விஷயங்களை அறிந்து கொண்டேன். பன்னிரண்டு வயது கிராமப்பெண் என்ன விஷய்ங்களை உணரக் கூடும்? என்று எவரும் ஆச்சரியப்படக்கூடும். மன்னிக்க வேண்டும், இதிலே ஆச்சரியத்திற்கு இடமே இல்லை. எனது சொந்தக் கிராமத்திலும் அதை ஒட்டிக்கிடந்த பர்கண்டி மாகாணத்திலும் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும்—கொந்தளிப்பும் என் மனதிலே ஒரு சில கேள்விகளை எழுப்பின. பன்னிரண்டு வயதான நான் நாட்டைப் பற்றி எண்ணுகின்ற அளவுக்கு அரசியல் சூறுவளி சுழன்றடித்தது. என் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்த அந்த எண்ணச் சுழல்கள், என் எதிர்கால வாழ்க்கை! மண இன்பம் முதலான நினைவையே என் உள்ளத்தைவிட்டு விரட்டி விட்டன. நான் மணம் செய்து கொள்ளாமலே வாழ்வது என்று தீர்மானித்துக் கொண்டேன். ஆண்டுகள் நான்கு உருண்டோடின.

நான் என் தாய்நாட்டைப்பற்றி நன்றாகவே உணர்ந்து கொண்டேன். எனது பிரன்சுநாடு—என்னைத் தாலாட்டி வளர்த்துவிட்டதொட்டில், பரிதாபத்திற்குரிய வேட்டைக்காடாக மாறுவதை நான் கண்டேன். தகுதிமிக்க, தன்னலமற்ற

தலைவர்களின்றி போன போக்கிலேயே சென்றுகொண்டிருந்த தாயகத்தைக் காப்பாற்றும் ஆர்வம் என் நெஞ்சில் வளரலாயிற்று. பதினறுவயதே நிரம்பிய பட்டிக் காட்டுப் பெண்! அவள் உள்ளத்திலே நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற பெரிய இலட்சியத்தின் எண்ண அலைகளா! ஆச்சரியப்படுகிறீர்களா? ஆனல் ஏனே என்னை எவ்வித ஆச்சரிய சுழற்சிகளும் தாக்கவில்லை. முடியுமா?—முடியாதா? என்ற கேள்வியும் அந்தக் கேள்விக்கு விடையுமே எனக்குத் தேவையாயிருந்தது. 'முடியும்'—அதுதான் எனது வாழ்க்கையின் குறிக்கோள்—என்ற திடநம்பிக்கை என்னைப் புதுமைப் பெண்ணுக்கிற்று. அளவுக்கு மீறிய ஆராய்ச்சியும், அவநம்பிக்கையும் நெருக்கடியான சந்தர்ப்பங்களின் போது இடம் பெறவே கூடாதவை என்று கருதலானேன்.

"வீழ்ச்சி யுற்ற பிரஞ்சுநாடே" "தாழ்வுற்ற தாயகமே" என்றெல்லாம் என் உள்ளம் கதறிற்று. அந்தக் கதறலை நான் கூறிய போதெல்லாம் அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்குச் சிரிப்பைத்தான் மூட்டிற்று "முட்டாள்தனம்—வேடிக்கை - கேலிக்கூத்து - இந்தத்திட்டம் பயங்கரமானது" என்று எனது பெற்ருேர்கள் மட்டுமன்றிச் சுற்றத்தாரும் அர்ச்சனை செய்து, கண்டிக்கலானர்கள்! முதலிலே எனது விருப்பம் அவர்களை விலா நோகச் சிரிக்கவைத்தது. சிரிப்பொலி வளர வளரச் சிந்தை நொந்த நான் திடங்கொண்டவளானேன். நான் நடத்த விரும்பிய பெரும் போராட்டத்திற்குக் குதிரை ஏற்றப் பயிற்சி அவசியமெனக் கருதினேன். அதற்காக என் கிராமத்தின் வழியே குதிரையிலே பவனி செல்லும் வீரர்களின் பின்னே ஓடிச்சென்று குதிரையில் ஏறிச்செல்பவர்களைப் பார்த்துப் பழக நான் முயற்சிப்பேன். அப்போதெல்லாம் எனது சகோதரர்கள் என் அத்து மீறிய

செய்கைக்காக என்னை எவ்வளவோ துன்புறுத்தி யுள்ளார்கள்.

அந்த உற்றார் உறவினர்களின் கண்டிப்பின் எதிரொலியாகத்தான் என் தந்தை "உன்னை நீரில் மூழ்கடித்துக் கொன்றாலும் கொல்வேனே தவிர உனது வெறுக்கத்தகுந்த (அவரது எண்ணப்படி) கருத்திற்கு ஒரு நாளும் இசைய மாட்டேன்" எனக் கூறலானார். ஆனால் நானோ ஏற்கனவே முடிவுசெய்த தீர்மானத்திலேயே உறுதி கொண்டிருந்தேன். எந்த சக்தியும் என்னை அசைக்காதுஎன்று எப்படியோ நான் நம்பிக்கொண்டேன். ஆச்சரியத்தால் உங்கள் கண்கள் அகல விரிகின்றனவா ? எனக்குமட்டும் அது ஆச்சரியமாகவே தோன்றவில்லை. எனக்கு நாட்டுப் பற்று அதிகமாகவே இருந்தது !

"என் நாடு எந்த சக்திக்கும் அடிமைப்படக் கூடாது" என்ற இலட்சியமே எனது இதய வேட்கையாயிற்று. அந்த வேட்கையை—ஆங்கில நாட்டு ஆக்ரமிப்பு சக்தி கேலி செய்தது. அந்தச்சமயத்தில் பிரான்சு நாட்டின் அரியணைக் குரியவனாக இருந்தவன் ஏழாவது சார்லஸ் மன்னன். அவனோ எல்லோராலும் கேலிசெய்யப்பட்டான். அந்தப் பரிதாபத்திற் குரியவனை 'மூளையற்றவன்' என்றனர் பலர். 'மான உணர்ச்சியும் -முதுகெலும்பு மற்ற கோழை' என்றனர் மற்றும் பலர். அவன் பிறப்பையே சந்தேகித்தனர் விஷயமறிந்த வட்டாரங்களிலே உலவிய பலர். மூளைக் கோளாறு பிடித்து மாண்டு போன ஆறாவது சார்லஸின் மனைவி ஏழாவது சார்லஸின் அன்னை தனது மகனுக்கு ராஜ ரத்தம் உடலிலே ஓடவில்லை என்று கூறத்துணிந்தது மட்டுமன்றி, ஆங்கிலேயர்களுக்குத்தான் உதவி செய்வதாகக் கூட வாக்களித்து விட்டாள். அதற்கு அறிகுறியாகத் தன் மகளையும் ஆங்கில அரசனுக்கு மணம் செய்து கொடுத்து விட்டாள்.

"நூறு வருடப் போராட்டத்திற்குப்" பிறகு பிரஞ்சு நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சி வேரூன்றும் அளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்டது. சார்லஸ்டாபின் இன்னும் மணி முடி தரித்த மன்னனாகவில்லை. நெஞ்சில் உறுதியற்ற அந்தக் கோழை, சார்லஸ்டாபின் - போருக்குப் பயந்து சினன் நகரில் ஒளிந்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் தான்ஒரு நாள் என் தந்தையின் ஆடு மாடுகளை ஒரு புல் வெளியில் மேயும் படி விட்டுவிட்டு மிகுந்த கவலையோடு ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தேன். என் எண்ணமெல்லாம் தாய் நாட்டின் விடுதலையிலேயே மொய்த்துக் கிடந்தது. இன்று ஏற்பட்டுள்ள நிலை நீடிக்க அனுமதித்தால் எதிர்காலத்தில் பிரஞ்சு நாடு சுடுகாடாகவல்லவா? ஆகிவிடும் என்று எண்ணினேன். அந்த எண்ணமே என்னை அச்சுறுத்தியது. என் தாய் நாடு வேற்று நாட்டவருக்குச் சுரண்டல் நாடாவதா? மாற்றாருக்கு வேட்டைக் காடாக இருப்பதா? என்னால் இந்த நினைப்பையே தாங்க முடிய வில்லை. நான் உயிருடனிருப்பதைவிட இறப்பதே மேல் என்று எனக்குத் தோன்றியது. நான் மாண்டு போவது என்பது எனக்குத் துச்சமாகப்பட்டது. சிலகாலத்திற்குள் சாய்ந்து விழும் என் உடல் ஓங்கி வளர்ந்து நெடுங் காலம் நிலைத்து வாழக்கூடிய தாய் நாட்டின் நல் வாழ்வுக்கு எருவாக உதவுமானால் - அதுவே என் வாழ்க்கையின் பலன் என நான் கருதினேன். அந்த எண்ணம் வளர- வளர அந்தச் சிந்தனையிலேயே உருவாகியது ஓர் எண்ணம். ஆம்! அதுதான் நானே ஓர் வீரனைப்போல் போர்க் கோலம் பூண்டு, களம் நோக்கி சென்று அந்நிய ஆங்கிலேயர்களை விரட்டியடித்து, பிறகு சார்லஸ்டாபினுக்குப் பட்டம் சூட்டும்படிச் செய்வது என்பதாகும். இந்த எண்ணத்திற்குத் துணையாக யாரோ - எனக்கு முழு நம்பிக்கைக்குரியவர்கள், ஆதரவு தருவதுபோலவும்—

நான் களம் சென்றால் நிச்சயம் வெற்றி பெற்று சார்லஸுக்குப் பட்டம் சூட்டமுடியும் என்று உறுதி கூறுவது போலவும் என் உள்ளத்தில் தோன்றலாயிற்று. எனவே நான் களம் செல்லுவது எனத் தீர்மானித்துத் திட்டமிடலானேன். நான் எண்ணியது என்ன தவறு? அந்த நெருக்கடியான நேரத்தில் நான் அமைத்துக் கொண்ட பாதை, வகுத்துக் கொண்ட வழி தவறுடையதா? என்னைப் போன்றவர்கள் இந்தப் புரட்சிக் கோலம் பூணக்கூடாதா? நாடு தீப்பற்றி எரியும் போது அதை அணைக்கும் முயற்சியிலே குறிப்பிட்ட ஆட்கள்தான் தேவை என்று மற்றவர்களை ஒதுக்குவதில்லையே! தன்னாலான அளவு-அந்தத்தீயணைக்கும் முயற்சியிலே ஈடுபடுவதுதானே நாட்டு நலம் நாடுவோரின் நாட்டமாயிருக்க வேண்டும். அந்த நிலையிலே தான் நான் புறப்படத் தயாரானேன்.

புறப்படு முன் எத்தகைய குழப்பமான மனப்போராட்டத்தை நான் நடத்த வேண்டியிருந்தது என்று நீங்கள் அறிவீர்களா? அழுகுரல் எழுப்பி என் முன் நின்று தடுத்த என் அன்புத் தாய்! அவள் கண்களிலிருந்து வழிந்துக் கொண்டிருந்த கண்ணீர்—அவளது இதயத்தையே அறுத்தோடி வரும் அருவியாக இருந்தது. எனக்கென்னசெய்வதென்றே புரியவில்லை. நாடு என்னை அழைக்கிறது! ஆனால் வீடோ கண்ணீர் அகழியால் என்னை வளைத்துக் கொண்டது. எனவே வீட்டை விட்டு வெளியேறும் எண்ணத்தை நான் வெளிப் படையாகச் சொல்ல விரும்பவில்லை. அதற்கென அவர்கள் உள்ளம் நோகாத முறையிலே ஓர் உபாயத்தைக் கையாண்டேன்.

"அம்மா! வாகொல்லர்ஸிலுள்ள மைத்துனியின் கணவன் டுரண்ட் லாசா ஏனோ என்னை அவசரமாக வரச்சொன்னாராம்—ஏதோ குடும்பக் காரியமாம்—போய்வரட்டுமா?" என்று

வளைந்து நெளிந்து கேட்டேன். விஷயமறியாத அன்னை ஒப்புக் கொண்டாள். நான் விடை பெற்றேன். நான் ஏன் அப்படிக் கூறினேன் தெரியுமா? என் மைத்துனியின் கணவன் டூரண்ட்லாசா எதையும் திறம்படச் செய்யக் கூடிய ஆற்றல் படைத்தவர். அவர்கள் வாழும் வாகொல்லர்ஸ் பட்டணம் சார்லஸ் பெயரினாலேயே வழங்கப் படுவது. அந்த பட்டணத்து கவர்னர் 'ராபர்ட் பாட்ரிகோட்' மிகவும் நல்லவர். என் தந்தைக்குத் தெரிந்தவர். அவரது பெயரை நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். உடல்வலிமையும் உள்ள உறுதியும் படைத்த அந்தப்போர் வீரன் பிரஞ்சு நாட்டின் நல்வாழ்வுக்கு தன்னை அர்ப்பணித்திருந்தான். அவரது ஆதரவு பெற்று **சினோன்** சென்று, சார்லஸ் டாபினைக் கண்டு உத்திரவுப் பெற்று களம் செல்ல வேண்டு மென்பது என் திட்டம். எனவே டூரண்ட்லாசா வரச்சொன்னார் என்று எளிதில் என் பெற்றோர் களை நம்பவைத்து விட்டு நான் வாகொல்லர்ஸுக்குப் புறப் பட்டேன்.

எனது ஆவலை டூரண்டிடம் வெளியிட்டு என் எண்ணத்தை ஒப்புக்கொள்ளச் செய்ய நீண்ட நேரம் ஆக வில்லை. பிரஞ்சு நாட்டு அடிமை நிலைமையையும், சார்லஸ் டாபி னின் பரிதாபத்தையும் ஆங்கில ஆதிபத்தியத்தின் ஆதிக்க வெறியையும் எடுத்துக் கூறி, அந்த நிலையை மாற்ற வேண்டிய அவசியத்தை விளக்கி, அதற்கு கவர்னர் ராபர்ட் பாட்ரி கோர்டின் பிரஞ்சு நாட்டுப் பற்றைத் துணையாகக் கொண்டு செயலாற்றவேண்டும் என்பதையும் புலப்படுத்திஅதற்காகவே அந்தக் கவர்னரிடம் என்னை அழைத்துச் செல்லும்படி நான் கேட்டுக் கொண்டேன். ஏன் திட்டம் நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கிருப்பதாகவும் அதற்காக எனக்கு பக்க பலமாகத் தூய கர்த்தரின், தூய மார்கரெட் தூய மைக்கேல்

முதலியவர்களின் ஆசீர்வாதம் எனக்கிருப்பதாகவும் கூறினேன். அப்பொழுதே எனக்கு நன்ருகப் புலப்பட்டது. கடவுள் நம்பிக்கை யுடைய என் பிரன்சு நாட்டு மக்கள் நிச்சயம் என்னை நம்பிப் பின்பற்றுவார்களென்று. எனவே நான் மேலும் வலியுறுத்திக் கூறலானேன்.

என் பேச்சு நகைச்சுவைக்கு ஓர் இலக்கியமாக அமைந்திருந்ததோ என்னவோ — அவர் விழுந்து விழுந்து சிரித்தார் — இறுதியிலே தான் அவர் சிந்தித்தார். சிந்தனை ரேகைகள் அவரது கரடு முரடான வதனத்திலே படியலாயின. 'ஜோன்! நான் உன்னை அவசியம் ராபர்ட்டிடம் அழைத்துச் செல்கிறேன்! என்று உறுதிதந்தார். மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தது என் உள்ளம். பிரஞ்சு நாட்டின் எதிர்காலம் என் கண்களின் முன்னே ஒளியுள்ளதாகத் தோன்றிற்று. தோற்றோடும் ஆங்கிலேயர்களின் பயங்கலந்த சோகவதனங்கள் பலவற்றை வரிசை வரிசையாக நான் பார்ப்பது போல் தோன்றிற்று. மகுடமணியாத கேலிச்சித்திரமாக உலவி வரும் 'சார்லஸ்டாபின்' அரியணையில் அதிகாரபூர்வமாக அமர்த்தப் பட்டு விட்டான் என்றே நான் கருதிக்கொண்டேன். அந்த நல்ல காரியத்திற்குத் துணை நின்ற நான் உண்மையிலே அதிர்ஷ்டசாலிதான். என்னையும் மீறி இன்பத்தின் கொடுமுடிக்கு இட்டுச்செல்லப் பட்டேன். இப்போது நான் ஓர் போர்வீரன். போர் வீரனின் செயல்களையும் கடமைகளையும் பற்றிச்சிந்திக்க விரும்பினேன்.

"ஜோன்!" என்று எங்கிருந்தோ வந்த ஒரு குரல் என் அமைதியைக் கலைத்தது. திரும்பிப் பார்த்தேன். டூரன்ட் லாஸா அங்கு நின்று கொண்டிருந்தார். 'ஏன்?' என்று கேட்டேன். 'புறப்படுவோம்! தயாராகு! ராபர்ட்டைப் பார்க்கலாம்' என்ருர்.

அப்பப்பா ! இந்த முடிவிற்கு அவர் வருவதற்குள் எத்தனை நாட்கள் கழிந்தன. நாட்கள் செல்லச் செல்ல என் உள்ளத்திலே கவலை குடிகொண்டது ! ஆங்கிலேய வேட்டை நாய்களின் ஓலம் பிரஞ்சுப்பகுதியில் பலமாகக் கேட்டது. **பெர்டிரன்டபாலங்கியும், ஜான் மெட்சும்** என்னுடன் வர ஒப்புதல் அளித்தார்கள். அவர்கள் இணங்குவதற்குள் என் உயிரே போய் விடும் போலிருந்தது. பல இரவுகள் நான் அழுது புலம்பியிருக்கிறேன். எனது அழுகை அவர்களின் உள்ளங்களை சிறுகச் சிறுக இளகச்செய்து விட்டது என்பதைப் பின்னர் தான் நான் உணர்ந்தேன். இதற்குள்ளாக பிரஞ்சுப்படை வீரர்களின் வீழ்ச்சியும் — அதன் காரணமாக ஏற்பட்ட மகத்தான இழப்புக்களும் துயரங்களும் என் காதுக்கு வந்தன. இந்த வேதனை மிக்கச் செய்திகள் என்னை வாட்டி வதைத்தன. நாட்கள் அதிக மில்லை — காலங் கடத்துவது அபாயமானது என்று பாலிக்கும் ஜானுக்கும் தெரிவித்தேன். என்னிடம் நிலையான ஒரு நம்பிக்கை — தளராத உறுதி ஏற்பட வேண்டு மென்ற ஒரே காரணத்திற்காகத் தான் அவர்கள் நாட்களைக் கடத்தினர்கள் என்று பின்னரே உணர்ந்தேன். அந்தச் சமயத்தில் தான் எனது மைத்துனியும் கருவுற்ருள். அது என்னை மேலும் தடைப்படுத்துமேஎன்று எண்ணியபோது துக்கம் தாங்க முடியவில்லை. "காலிலே எனக்கு வலிமையிருக்கிறது! நடந்து சென்று விடலாமா?" என்று கருதினேன்.

"போர் உடை இல்லா விட்டால் என்ன ? போய் விடலாமே!" என்று கூட நினைத்தேன்.

இதற்குள் டூரண்ட் லாசா புறப்படும்படிக் கூறினர். பாலியும் ஜானும் எனக்குத் துணையாக வந்தனர். நாங்கள் நேராக ராபர்டின் வாகொல்லர்ஸ் மாளிகையை நோக்கிச் செல்லலானேம்.

## ராபர்ட் பாட்டரி-கோட்

"சார்! "அந்தப் பெண்" என்றான் என் பணியாள்.

"யார்? எந்தப் பெண்" என்றேன் நான்.

"லொரேய்ன் மாகாணத்தின் டோம்ரெமி கிராமத்திலிருந்து" என்று தொடங்கினான் அவன்.

"ஓ! இரண்டு தினங்களுக்கு முன் என்னைப் பார்க்க வேண்டுமென்று வந்திருப்பதாகக் கூறினாயே அவளா? அவளைத்தான் அவள் தந்தையிடம் சொல்லி அறையிலிட்டு பூட்டி வைக்குமாறு சொன்னேனே! மறுபடியுமா வந்திருக்கிறாள்" என்று கேட்டேன்.

"ஆம்! எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. போகவும் மறுக்கிறாள்"— என்று அவன் கூறவே,

"அவ்வளவு துடுக்குக் காரியா? சரி, வரச்சொல்" என்று கட்டளையிட்டேன்.

சிறிது நேரத்திற்குள் என் அறையின் கதவு திறக்கப் பட்டது. ஜோன் உள்ளே நுழைந்தாள். 17 அல்லது 18 வயதுடைய ஓர் இளம் பெண், நாட்டுப்புறம், உழைப்புக்குச் சளைக்காதஉடல்—புதியதொரு முகத் தோற்றம். ஆழ்ந்த சிந்தனையைக் காட்டும் கண்கள். அழகு அதிக மில்லாவிட்டாலும் ஆற்றல் நிறைந்தவள் போன்று காணப்பட்டாள். சிவப்பு நிற ஆடை உடுத்திருந்தாள். இந்தத் தோற்றத்தோடு வந்தவள் என்னை வணங்கினாள்.

பின்னர், "பிரபு! எனக்கு ஒரு குதிரையும், போர் வீரனின் உடையும் கொடுத்துச் சில போர் வீரர்களுடன் என்னை சார்லஸ் டாபினிடம் அனுப்ப வேண்டும். இது தங்களுக்கு

எனது ஆண்டவனிடும் கட்டளையாகும்'' என்று கூறினள். இது ஆண்டவனிடமிருந்து வந்த கட்டளை என்ற செய்தி என்னைத் தூக்கி வாரிப் போட்டது. நான் கோபத்தால் நடுங்கினேன். நான் டியூக்குமல்ல—பாதிரியுமல்ல அவரது கட்டளைக்குக் கீழ்படிய! பாட்ரிகோட்டின் பிரபு நான், எனது மன்னனின் கட்டளையைத் தவிர வேறு எந்தக்கட்டளையையும் நான் மதிப்பதில்லை. ஒப்பமாட்டேன் என உன் ஆண்டவனுக்கு சொல்'' என்றுகடிந்து உரைத்தேன்.

"என் பிரபு இந்த உலகத்தின் தலைவர் மட்டுமல்ல பரலோகத்தின் மன்னர்—ஐயா!' என்றுள் தன் கருத்தை வலியுறுத்தும் முறையில். "இவளென்ன பைத்தியமா? ஏன் இவளைப் பற்றி எனக்கு முன்னரே தெரிவிக்கவில்லை ?'' என்று என் ஏவலாளிகளைப் பார்த்துக் கடாவினேன். அவளைப் பற்றி எனக்கு பலமான சந்தேகம் ஏற்பட்டது. அந்த நேரத்திலும், அவள் தன் நிலைமையையும் அதனல் அவள் எதிர்பார்க்கும் எனது தவிர்க்க முடியாத கடமையையும் என்னிடம் வலியுறுத்தினள். நான் பதில் கூற வில்லை.

"பிரபு! குதிரைக்கு 16 பிராங்குகள் ஆகும்—பெருந் தொகைதான். ஆனல் எனக்கென்று தனியாக அழகான உடை ஒன்றும் தேவையில்லை. எனக்குப் பொருத்தமான வீரனின் கவசங்களை நான் தேடிக்கொள்கிறேன். பெரும் எண்ணிக்கைப் போர்வீரர்களும் எனக்கு வேண்டியதில்லை. ஆர்லியன்சைக் கைப்பற்றத் தேவைப்படும் அளவு படைவீரர்களைச் சார்லஸ் எனக்கு அளிப்பார். எனவே என்னைத் தயவு செய்து சார்லசிடம் அனுப்பிவிடுங்கள்'' என்று மேலும் தொடர்ந்து பேசினள். எனக்கு ஆச்சரியம் தாங்க முடிய வில்லை.

"ஆர்லியன்சைக் கைப்பற்றுவதா? நீயா? யாராலும் சாதிக்க முடியாத அரும்பெரும் காரியத்தை உன்னால் சாதிக்க முடியுமா? என்ன பைத்தியக்காரத்தனம். ஆர்லியன்சை கைப்பற்றப் படை திரட்டுவதா?" என்று மேலும் மேலும் ஏற்பட்ட வியப்போடும் திகைப்போடும் கேட்டேன். அவளோ மிக மிக அமைதியாக "ஆமாம் தளபதி! ஏன் சந்தேகம், என்னோடு மூன்று வீரர்களை அனுப்புங்கள். பாலி—ஜாகன் இவர்கள் என்னோடு வருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். தாங்கள் உத்திரவு தந்தால் போதும்" என்று பணிவோடு கேட்டாள்.

அவளது உறுதி என்னை என்னவோ செய்தது. என் மனம் என்னைக் கோழை என்று குறை கூறியது போல் தோன்றிற்று.

"சரி, சரி, வெளியே போ! நான் அழைக்கும் வரை காத்திரு" என்று அவளை அனுப்பி விட்டு பெர்டிரன்ட் பாலெங்கியை வருமாறு அழைத்தேன்.

பாலெங்கி! 36 வயதுடைய பிரஞ்சு நாட்டுப் போர் வீரன். நாட்டுப்பற்றுடையவன். நல்லவன்—அவன் உள்ளே நுழைந்தான்.

வழக்கமாக மேல் அதிகாரிகளுக்கு அளிக்கும் மரியாதையை அளித்து விட்டு அடக்கமாக நின்றான். நான் அவனை அருகில் அமரச்செய்து,

"பாலி! நான் சொல்வதைக் கேள்! ஜோன் பைத்தியக்காரி! ஏதேதோ உளறுகிறாள்! எனக்கு அவளை நன்றாகத் தெரியும். அவள் தந்தை ஒரு சாதாரண விவசாயி, பெரிய பணக்காரனுமல்ல. அவரது உறவினர்களில் எவரா

வது சட்டம் தெரிந்த வக்கீலாகவோ, தேவாலயப் பணியா ளாகவோ இருந்தால் அவர்கள் தங்களை மிக மிக உயர்ந்த வர்களென்று கருதிக் கொள்வார்கள். அந்த நேரத்தில் நீ சார்லஸ் டாபினிடம் அழைத்துச் சென்று ஏதாவது தகராறு கள் ஏற்பட்டால் நம்மிருவருக்குமே தொல்லை தான். அதற்கு நானல்லவோ பதில் கூற வேண்டும். நான் தானே அவளது சொந்த மாகாணத்தின் ஆட்சியாளன். எனவே அவளை அழைத்துச் செல்ல வேண்டாம்'' என்று அவனுக்கு விளங் கும் படிக் கூறினேன்.

அவனோ எனக்கே உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட் டான்.

தலைவ! அவள் பைத்தியக்காரியாக இருந்தால்தான் என்ன. நமக்கு வேண்டியது வெற்றி இங்குநாடு சுடுகாடாகின்றது. ஆங் கிலேயர் ஒவ்வொரு பட்டணமாகக்கைப்பற்றிக்கொண்டே வரு கின்றனர். லோயர் பகுதியில் பாதி அவர்கள் கையில் சிக்கி விட்டது. பாரிஸ் நகரம் அவர்களிடம் — இந்த வாகொல்லர்ஸ் மாளிகை அவர்களிடம் இன்னும் சில தினங்களில்' இதனைத் தாங்கள் பெட்போர்டு டியூக்கிடம் ஒப்படைக்க வேண்டுமென் பதுதெரியாதா? இப்போதுகூடத் தற்காலிகமாகத்தானே இங்கு நீங்கள் இருக்கிறீர்கள்?

சார்லஸ் டாபின் போருக்குப் பயந்து எலியைப்போல் சினுன் நகரில் ஒளிந்து கொண்டிருக்கிறான். அவனது தாயோ அவன் அரியணைக்குரியவனு? என்ற சந்தேகத்தையே வளர்க்கிறாள். முன்னேறும் ஆங்கிலேயரை முறியடிக்க யாரு மில்லை. எல்லோரும் சோர்ந்து விட்டனர். எனவே வேண்டு மானால் நானே அவருக்காக 16 பிராங்குகளில் ஓர் குதிரை வாங்கித் தருகிறேன் அவளை எப்படியாவது அனுப்புங்கள்''

என்று எனக்கே விளக்கிக் கூற ஆரம்பித்தான். என் நிலை சங்கடமாகி விட்டது.

ஒரு பக்கம் அரசனின் அதிகார ஆட்சி. மற்றொரு பக்கம் கடமையின் கடைசி முயற்சி. எனவே சிந்திக் கலானேன்.

மனிதன்—பிறப்பினாலேயே சிந்திக்கும் திறனை இயல் பாகப் பெற்றவன்! ஆனால் அவன் தன்னை ஈடுபடுத்தியி ருக்கும் நிலையமோ, வேலையோ, அவனிடமிருந்து அதைத் தட்டிப்பறிக்கவோ அன்றி வளர்க்கவோ உதவக் கூடும். அவன் என்றைக்கும் 'இயந்திரமாக' இயங்க முடியாது. 'கூடாது' என்று தடைசெய்யும் நிலையங்கள், ஆதிக்கப் பீடங்கள் "சிந்தனையைச்" சிலுவையிலே சாய்த்திருக்கின் றன. மிக மிகச் சிரமப்பட்டு அவன் சிந்திக்க ஆரம்பிக்கும் போது, அவன் அதுவரையிலே காணாத, கேளாத, காட்சி கள்—கருத்துக்கள்—ஆகியவற்றைக் காண்கிறான்—கேட்கி றான். தன்னையும் தன் நிலையையுமே ஒரு முறை நினைத்துப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுகிறான். சூழ் நிலையின் தன் மையை ஒட்டி வருந்துகிறான்—துடிக்கிறான்—தாங்க முடியாத எரிச்சல் அவனை அரிக்கிறது—ஆத்திரப்படுகிறான்! அதை வெளிக்காட்ட விழைகிறான். அந்த விழைவு, அவனுக்கு ஆயிரம் கூர்வாளை அவனது நெஞ்சுக்கு நேரே கொண்டு வந்து விடுகிறது! அடங்கிக்கிடப்பது—எதிர்த்துக் கேட்பதை விட பலமடங்கு இலாபகரமானது என்பதை உணர்கிறான். தன் இயல்பையே—சந்தர்ப்பத்தை யொட்டி அடக்கிக் கொள்கிறான்—என்றாலும் அடிக்கடி அவன் உள்ளத்தைப் புதிதாக எழும் எண்ணங்கள் தூண்டி விடுகின்றன! அவன் போக்கிலே அவனே அறியாத ஒரு மாறுதலை அது ஏற்

படுத்தத்தவறுவதில்லை. அந்த மாறுதல் சிந்தனையின் விளைவாக ஏற்பட்ட அந்த மாற்றம் வெளிப்படையாக வெளிவரும் போது—அவன் "புதுக் குழப்பத்தின் நிலைக்களனாக" மாறி விடுகிறான். ஒப்புக் கொண்ட இலட்சியங்களைத் தழுவ மறுக்கும் அவன் உள்ளம், புதிய எண்ணங்களைத் தாங்கிப் பறக்கும் சிட்டாக மாறுகிறது! கூண்டை உடைத்தெறிய முயலுகிறான்! பழைமைக் கூண்டு என்ன சாதாரணமானதா? மோதி மோதிப்பார்க்கிறான்—முடிய வில்லை என்றால் அந்த மோதல் போராட்டத்திலே மாண்டு மடிந்து போகிறான்! தப்பி வான்மண்டலத்தை எட்டும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது தாவிப் பறக்கிறான்! எங்கெங்கும் தன் கருத்துக்களை வாரி வீசுகிறான்! நிலங்களைப் பொருத்து—அதன் வளத்தை—வெட்பதட்ப நிலைகளை ஒட்டித் தூவுகின்ற அறிவு விதைகள் முளைக்கின்றன—அழிகின்றன.

இப்படி அறிவு விதைகளைத் தூவினாள் ஜோன். பாலியின் நிலத்திலே—ஜானின் நிலத்திலே அவை முளைத்தன. என் மன நிலத்திலே அது முளைக்கவில்லை. மனித சமுதாயம் எத்தனையோ விதவிதமான மனிதர்களை உள்ளடக்கி வைத்திருக்கும் ஒரு கூண்டு! எனக்கேன் இந்த 'வம்பு' எப்படியோ எல்லோரும் வாழ்ந்தால் போதும் என்ற நினைப்பு எனக்கு ஏற்பட்டது. எனவே ஜோனை சார்லஸ் டாபினிடம் அனுப்பியே விடுவோம் என்ற முடிவுக்கு வந்தவனாய் அவளை மீண்டும் அழைக்கும்படி என் பணியாளிடம் கூறினேன்.

ஜோன் ஓடோடியும் வந்தாள். ஆயிரம் எண்ணங்கள் அவள் உள்ளத்தைக் குடைந்திருக்க வேண்டும். எனது முடிவை எதிர்பார்த்துத் தவியாய்த் தவிப்பவள்போல் காணப்பட்டாள். அதை அறிந்த நான் வெளியில் காட்டிக் கொள்ளாமல் "சரி, உன்பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"என் கிராமத்திலே ஜென்னி என்பார்கள் — இங்கே நகரத்திலே ஜோன் என்பார்கள் — போர்வீரர்கள் என்னை பிரஞ்சுப் பெண் என்பார்கள்" என்று பதில் இறுத்தாள்.

"வயது எத்தனை" என்றேன்.

"பதினேழு என்று அவர்கள் எனக்குச் சொன்னார்கள். ஒரு வேளை பத்தொன்பதாகக் கூட இருக்கலாம். நன்றாக நினைவில்லை" என்று பதில் தந்தாள்.

'சினுன் சென்று என்ன செய்வாய்?' என்றதற்கு அவள்—"நான் சார்லசிடம் விடைபெற்றுப் படைதிரட்டி—ஆர்லியன்சைக் கைப்பற்றி — ஆங்கிலேயரை விரட்டியடித்து, சார்லஸ் டாபினுக்கு ரீம்ஸ் நகரில் முடிசூட்ட வேண்டும் என்பது, ஆண்டவன் எனக்களித்த கட்டளை. அதை நிறை வேற்றுவேன்" என்றாள்.

இன்னும் பல கேள்விகள் அவள் ஆண்டவனோடு பேசுவதுபற்றி — அந்தப் பேச்சு முறைபற்றி—அதன் வழிவகைகள் பற்றிக்கேட்டேன். அவள் பதில் சொன்னாள். அவளது பதில் எனக்கு ஆத்திரத்தையே உண்டாக்கியது. "இவைகளெல்லாம் உனது கற்பனையினின்றும் உதயமானவைகள்" என்று கூச்சலிட்டேன் "ஆண்டவரின் கட்டளைகளும் சேதிகளும் யாருக்கும் வருவது அப்படித்தானே" என்று துணிச்சலோடு அழுத்தந்திருத்தமாக கேட்டுவிட்டாள். எனக்கு அவளது தெளிவான உறுதியான பதில்கள் ஒருவாறு திருப்தி அளித்தன. அவளை முழுதும் நம்பினேன்.

"நீ மூன்று வீரர்களோடு உன் விருப்பப்படியே சினுன் நோக்கிப் புறப்படலாம்" என்று சொல்லி அதற்கு அறிகுறியாக அரசாங்க முத்திரையிட்ட சீட்டு ஒன்றும் அவளிடம் கொடுத்தேன்.

இதைக்கேட்ட அவளது உள்ளம் மகிழ்ச்சி சிந்து பாடியிருக்கவேண்டும். அவள் கண்களிலே நம்பிக்கை ஒளி வீசியது. முகத்திலே சிவப்பேறி வெற்றியைப் பிரதி பலித்தது: பல நாட்களாகக் கஷ்டப்பட்டு, கிடைக்குமா? கிடைக்காதா? என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பொருள்—கிடைத்து விட்டால், அடையும் ஆனந்தத்திற்கு ஓர் எல்லைக்கோடும் உண்டோ? எனவே அவள் உடனே பூரிப்போடும் களிப்போடும் சினன்நோக்கிப் புறப்படத் தயாரானள்--சார்லஸ் மன்னனை பேட்டிகாண்பதற்காக.

# ஜோன்

நான் முன்னே செல்ல — பாலி — ஜான் முதலான சிலர் உடன் வர, சினன் நோக்கிப்புறப்பட்டோம். நான் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினேன். அடுக்கடுக்காக வரும் இன்பத்திரைகளினூடே எனது இலட்சியபுரி நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். எங்களது பயனத்திற்குரிய நேர மாக இரவுப்பொழுதையே கொண்டோம். காரணம் அதுவே எதிரிகளிடம் சிக்காமல் செல்லப் பாதுகாப்பா யிருக்கு மென்று கருதினேம். அந்தப் பட்டணத்தின் பெரும்பாலான மக்கள் பெருந்திரளாக, ஆச்சரியத்தோடும் அன்புள்ளத்தோ டும் என்னை வழியனுப்பினர்கள். முதலில் எனக்களித்த குதிரை பயன்படாமல் போகவே, அவர்களாகவே நிதி சேர்த்து, 16 பிராங்குகள் கொடுத்து சிறந்த குதிரை ஒன்றை வாங்கி எனக்களித்தார்கள். ஜான் எனக்குப் போர் வீரனின் உடையும் கவசமும் தந்தான். ஏற்கனவே எனது தலை மயிரை ஆண்களைப்போல் வெட்டி விட்டுக் கொண்டிருந்தேன். அல்லும் பகலும் பல ஆடவரோடு தனித்து இருக்கவேண் டிய நான், அப்படி இருந்தால் தான் என் பெண்மையை அவர்களுக்கு நினைவுப்படுத்தாமலிருக்க முடியுமெனக்கரு தினேன். தேவாலயத்திலிருந்து ஐந்து சிலுவைகள் பொறிக் கப்பட்ட வாள் ஒன்றும் கொடுத்தார்கள். நாங்கள் விடை பெற் ரேம். நான் எனது இறுதி முனையிலேயே எனது விழிகளைப் பதித்திருந்தேன். வழியைப் பற்றிக் கொஞ்சங் கூடக்கவ லைப்படவில்லை. "பாதை யெனக்கு நன்ருகவே புரிகிறது கொஞ்சம் கூடக்கவலை வேண்டாம்" என்றேன். குதிரை களின் காலடிச்சத்தங்கள் அமைதியோடு ஐக்கியமாவது,

வரையிலும் லாசா அங்கேயே நின்று கொண்டிருந்தார். தொலைவில் செல்லச்செல்ல நான் அவரைப்பார்க்க முடிய வில்லை—அவரும் என்னைப் பார்த்திருக்க முடியாது.

சினன் நுழைவதற்கு நாங்கள் பர்கண்டி மாகாணத்தை பகைவரின் ஆட்சியில் அகப்பட்டிருந்த நாட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. நான் எதைப் பற்றியும் கவலைப் படவில்லை. என்னுடன் வந்த வீரர்கள் சந்தேகத்தால், பற் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தார்கள். "அச்சம் தவிர்--முன்னேறுவோம்! முறியடிப்போம்! வெற்றி நமதே!" என்ற வார்த்தைகளைத் தவிர நான் எதையும் அவர் களுக்குத் தெரிவிக்க வில்லை. யாரிடமும் பணமோ பொருளோ கிடையாது! எனவே அதுபற்றி நாங்கள் அஞ்சவேண்டிய தேவையில்லை. தைரியமாக நாங்கள் சென்று கொண்டி ருந்தோம். தாங்கள் மேற்கொண்டிருக்கும் பணியின் விளைவு சினன் சென்றபின் எதுவாக யிருக்கும் என்பதும் அவர் களுக்குத் தெரியாது: "எதற்கும் அஞ்சற்க" என்பதைத் தவிர வேறு எதனை அவர்களுக்கு நான் தெரிவிக்க இய லும். எங்கள் பயணம் தொடர்ந்தது. என்னை அந்த வீரர் கள் நம்பினார்கள்.

நாங்கள் கடந்து செல்ல வேண்டிய பாதை மிகவும் கடுமையானதாக இருந்தது! பயணம் இரவிலே தான் ஆரம் பமாகும். திடீரென்று தோன்றும் பள்ளங்கள்—பள்ளத்தாக் குகள் அடுத்து ஆரம்பமாகும் மேடுகள்—அதுமட்டுமா? எங்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும் பெருவெள்ளம்—நடுக்கும் குளிர்—இவைகளை யெல்லாம் தாண்டி முன்னேற வேண்டியவர்களானோம். நான் இறுக்கமாக அணிந்திருந்த கம்பளி உடையைச் சிறிது கூடக் கழற்றவில்லை. காலில் பொதிந்திருந்த சுவடுகளையும் கழற்றவில்லை. குதிரைமேலேயே

உண்டோம்—உறங்கினேம். பயங்கரமான நடுநிசி நேரங்களும், அதன் அமைதியைக் கிழித்துக்கொண்டு வெளிவரும் திடுக்கிடும் ஓசைகளும் எங்கள் பயணத்தைத் தடுத்து நிறுத்த வில்லை. கொள்ளைக் கூட்டத்தாரின் தொல்லைகளையும், கொடுமைகளையும், பயமுறுத்தல்களையும் வென்று, பர்கண்டி மாகாணத்தைக் கடந்த பின்பும் ஆபத்துக்கள் நீங்கி விட்டன என்று சொல்வதற்கில்லை. நாங்கள் கடந்து வந்தபல பகுதிகள் என்னை உணர்ச்சியற்றவளாக்கின. வெறிச்சென்று யாரும் கவனிப்பாரற்று—பாலைவனமாக அந்தப் பகுதிகள் காட்சி யளித்தன. காரணம் அந்தப் பகுதிகளை இதுவரையிலும் போர் சந்தித்ததில்லை. பர்கண்டி மாகாணத்தின் அதிகாரிகளால் பணம் கொடுக்கப்பட்டு, இந்த பகுதியிலே வாழும் சில அதிகாரிகளால் நடத்தப்பட்டு வந்த கொள்ளைகளும், நாசவிளைவுகளும் அந்தப் பகுதியையே பாழ்படுத்தியிருந்தன. கிராமப் பெண்ணுகிய நான் இந்தப் பகுதிவாழ் மக்களின் துயரத்தையும், துன்பத்தையும் நன்கு உணர்ந்தேன். சுற்றியுள்ள கிராமங்கள் அத்தனையும் அழிவுற்றுக் கிடந்தன. தரைமட்டமாகிக் கிடந்த குடிசைகள் கவனிப்பாரற்றுக்கிடந்த விளைநிலங்கள்—சுருக்கமாக அழிவு அணைத்திருந்த அந்தப் பகுதியின் நிலை என்னை வேதனைக் குள்ளாக்கிற்று. சாலை ஓரங்களில் செத்துக்கிடந்த மிருகங்களின் பிணங்கள்—எலும்புக்கூடுகள் — சதைக்குன்றுகள் தீண்டுவாரற்றுக்கிடந்தன. கொள்ளைக்காரர்களின் கொடும் பசிக்கு ஒருவேளை அவைகள் பயன் பட்டிருக்கக்கூடும். பயிர் விளைச்சல் இல்லை—புகைபோக்கிகள் அபூர்வமாகவே காணப்பட்டன. எங்கும் துளி தண்ணீர் கூடக் காணவில்லை. மனித சமுதாயத்திடம் எனக்கிருந்த பற்றும் பாசமும் பொங்கிவழிந்தது. என்னையும் அறியாமலே என் கண்கள் உருட்டிவிட்ட கண்ணீர்த்திவலைகள்

குதிரையின் சேணத்தைப் பிடித்திருந்த என் கரங்களைச் சுட்டன. ஆனல் அதனை நான் வெளிக்காட்டாமல் ஒரு வாறு சமாளித்துக் கொண்டேன்.

சினுனை நாங்கள் நெருங்கி விட்டோம். சினுனின் கோட்டைச் சுவர்களை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாங்கள் ஒவ்வொரு நிமிட நேரமும் ஏற்பட்ட நம்பிக்கையோடு கலந்த மகத்தான இன்ப உணர்ச்சியை நன்ருக அனுபவித்தோம். ஏராளமான மக்கள் அங்கே எனது வரவை எதிர் பார்த்து நிற்பதுபோல் கூடி நின்ருர்கள். நாங்கள் அரண் மனையின் தலைவாயிலைத் தீண்டியதும்--அரசாங்கப் பணியாள் உரத்த குரலிலே முழங்கினன் -- 'இதோ ஜோன்' என்று. அந்தக் குரல் அந்தப் பகுதி முழுவதும் எதிரொலித்தது! கூடியிருந்தவர்களின் கண்களையும் அவைகளில் ஏற்படும் மாறுதல்களையும் நான் கூர்ந்து கவனித்தேன். தங்களையும் மீறி ஏற்படும் சிரிப்பை அவர்கள் அடக்கிக்கொள்ள முயன் ருர்கள். அந்த முயற்சியிலே ஏற்படும் தற்காலிக வெற்றியும் தோல்வியும் மாறி மாறித் தோன்றிக் கொண்டே இருந் தன. 'ஐயோ பாவம்' என்று பரிதாபப்படும் முகபாவத்தைப் படம் பிடித்துக் காட்டும் வதனங்களும் அங்கே இல்லாமலில்லை! குறிப்பாக எல்லோருக்கும் நான் கேலிக்குரியவளாகவே காணப்பட்டேன்! என் சொந்த ஊரைவிட்டுக் கிளம் பும்போது நான் சந்தித்த எதிர்ப்புக்களும் கேலிகளும் இங் கும் தலைவிரித்தாடின. இவைகள் எல்லாம் என் உள்ளத் தைப் புண்படுத்தின. ஒரு நல்ல காரியத்தில் ஈடுபடுபவர் களை வரவேற்காவிட்டாலும், வாழ்த்தாவிட்டாலும் - வசை பாடாமலாவது இருக்கலாமல்லவா? அந்தப் பண்பை நான் எதிர்பார்ப்பது என் தோல்வியை ஏற்றுக் கொள்வதாகும். எனவேதான் நான் கொண்ட முயற்சியை இவைகளால் தடுக்க முடியவில்லை. அந்தத்திட உள்ளத்தோடு அரண்மனையில் நுழையத் தயாரானேன், சார்லஸ் டாபினைக் காண்பதற்காக.

# சார்லஸ் டாபின்

"என்னை எல்லோரும் முட்டாள் என்று அழைக்கின்ருர்களே! நான் என்ன அவ்வளவு முட்டாளா? இவர்கள் செய்யாத எந்தத் தவறுன செயலை நான் செய்து விட்டேனும்! அயோக்கியர்கள்!" தூக்கம் வராத நடுநிசி நேரங்களில் நான் இதையெண்ணி எண்ணி வருந்துவேன். நான் மன்னன்! ஆனல் எவரும் என்னை மன்னன் என்று மதிக்க மறுத்தனர். எனக்கு முதுகெலும்பு இல்லையாம். ஏன் இல்லை? இல்லை யென்ருல் நான் இப்படி நிமிர்ந்து நிற்க முடியுமா? "சார்லஸ் ஒரு பேடியாம்" எவ்வளவு துடுக்கான வார்த்தை. போர்க்களம் எனக்குப் பிடிக்காததுதான். வாள் பயிற்சி பெற்றதில்லை - ஒத்துக்கொள்கிறேன். நன்ருக வாள் சுழற்றுபவர்கள் வந்தால் அவர்களுக்கு நான் உயர்ந்த முறையில் வணக்கம் தெரிவிப்பேன். தவறில்லையே! போர் வீரர்களைக் கண்டால் என் உடல் சற்று ஆடும். அதற்குப் பெயர் அச்சமல்லவே! யாராவது விரைந்தென்னைத் தாக்கினுல் நான் ஓடிவிடுவேன். இந்தச் செயல்களுக்குப் பெயர் பேடித்தனமா? என் எண்ணப்படி அவைதான் 'தற்காப்புத்தன்மை' ஆகும். பலர் பலவிதமாகக் கருதுகிருர்களே என்பதற்காக நான் வருத்தப்பட முடியுமா?

'சார்லசின் உடம்பிலே ஓடுவது அரச ரத்தம் இல்லை;

இப்படியுங்கூட பிரச்சாரம் செய்கிருர்கள். ஏதோ என் ரத்தத்தைப் பரிசோதனை செய்தது போல! மேலும் அரச ரத்தம் வேறு மற்றவர் ரத்தம் வேறு என்ற வித்தியாசத்தைக் கண்டு பிடித்தவர்கள் போல. என்உடம்பில் ஓடும் இரத்தத்தை நானே காண முடியவில்லை. அப்படி இருக்க இவர்கள்

எப்படிக் கண்டார்கள். பொய் பேசுவதில் கொஞ்சங் கூடப் பொருத்தம் வேண்டாமா? எதை வேண்டுமானாலும் பேசுவதா அவர்கள்? மடையர்கள்!

ஆனால் என் தாயும் அப்படிதானே கூறுகிருள். அவள் கூறுவதில் ஏதாவது உண்மையிருக்குமோ? சேச்சே! இராது. அவள் விளையாடுகிருள் என்று நினைக்கிறேன். என் தாயாருக்கு அது ஒரு பொழுது போக்காக இருக்குமல்லவா? ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு பொழுது போக்கிருப்பது போன்று. உண்ணுவதும் உறங்குவதும் எனக்குப் பொழுது போக்கு. அது என்னவோ! எப்போதும் சாப்பிட்டுக் கொண்டே யிருப்பது என்பது எனக்கு இயல்பாகி விட்டது.

என்னைச் சுற்றியுள்ளவர்கள் மிக மிகப் பொல்லாதவர் கள். என் தந்தை ஒரு பைத்தியமாம்! அடிக்கடி அதைச் சொல்லி என் மனதைப் புண் படுத்துகிருர்கள். அவர்களுக்கு அது ஒரு வேடிக்கை. என்னை மன்னனுக மதிக்கா விட்டாலும் மனிதனுகவாவது மதிக்கலாமல்லவா? அது கூடச் செய் வதில்லை.

'அழுக்குப் படிந்த நாயே' என்று என்னை அழைப்பார்கள். முதலில் எனக்கு ஆத்திரமும் அழுகையும் தான் வந்தது. பிறகு! என்ன செய்வது? பழக்கப்படுத்திக் கொண்டேன். நாயென்ன மட்டமான பிராணியா? உயிருள்ள பிராணி அதிலும் நன்றியறிதலுள்ள பிராணிதானே. அப்படியானல் நாயாக இருப்பதில் என்ன குறை 'சீ! நாய்!—மிருக இனம் —விலங்கு! நான் ?........ ஒகோ!........

விஷமக்காரர்கள்! அவர்களைக்கண்டாலே எனக்குப் பிடிக்காது. கொஞ்சம் பயமுங்கூட. நானும் அப்படித்தான்! அவர்களை மதிக்கவேகூடாது! நடந்து கொள்ளுகிற முறையை

ஒட்டித்தானே அவர்களும் நம்மை மதிப்பார்கள். நான் ஒரு தாராள சிந்தைக்காரன் எவ்வளவு பொருள் விரயமானாலும் நான் கவலைப்பட மாட்டேன். அரசாங்கப் பொக்கிஷத்தை எவ்வளவு விரைவில் செலவழிக்க முடியும் என்று சோதனை செய்து வெற்றியும் பெற்றேன். அந்த வெற்றி பொக்கிஷத்தை நிரந்தரமாகவே— எந்நாளும் காலியாக்கிவிட்டது. பணம்! அது தேவை! வழி! ஒன்று கண்டு பிடித்தேன். என்ன அது! கடன் வாங்கினேன்.

என் மனைவி! சிசிலி நாட்டு இளவரசி சொகுசாக வாழும் பரம்பரையைச் சேர்ந்தவள். அவள் ராணி! அரசிக்கேற்ற அந்தஸ்து அவளுக்குத் தேவை. அது இல்லாவிட்டால் நாலு பேர் குறை கூறுவார்கள். அதற்கு நான் இடங்கொடுக்கலாமா? கூடவே கூடாது. எனவே எப்படியும் என் மனைவியின் மனங் கோணுமல் நடப்பது எனது பிறவிக்கடன் என்ற பெருண் மையை நான் பலமாக உணர்ந்து கொண்டேன். வாழ வேண்டு மென்று விரும்புகிறவர்களுக்கு நான் தரக்கூடிய அறிவுரையும் அதுதான். கடன் தந்தவன் - கடன்காரனிடம்- நாள் செல்லச் செல்ல அதட்டிப்பேசலாம் என்ற உண்மை எனக்கு அது நாள் வரை தெரியாது! குறித்த காலத்தில் அந்தப் பணம் கொடுக்கப்படா விட்டால், ஏடா முட்டாளே! என்று கூட கேட்கலாம் போலிருக்கிறது. கேட்டார்களே என்னைப்பார்த்து! நான் என்ன கோபித்துக் கொண்டேனு? ஊம்! ஆத்திரப்படுவது அர்த்தமற்ற செய்கையாயிற்றே!

நான் ரிம்ஸ் ஆர்ச் பிஷப்பிற்கு பணம் தரவேண்டும். அந்த முரட்டுத்தடி ஆத்மா லார்ட் சேம்பர்லேய்ன் லா டிரிமுய்லி யிருக்கிறுனே அவனுக்கு இதைவிட அதிகமாக 27,000 (இருபத்தேழாயிரம்) பவுன் கொடுக்க வேண்டும் இதற் காகத்தான் இவ்விருவரும் என் உயிரையே வாங்குகிறுர்கள்.

எனக்கு ஒன்றும் பேச உரிமையில்லை என்ற அளவுக்கு நிலைமையை வளர்த்திருக்கிறார்கள். பேசுவது அவர்களுக்குத் தொழிலாயிற்று! ஒரு தடவை அந்த லா டிரிமுலி கையை ஓங்கி என்னை அடிக்கவே வந்தானே! எவ்வளவு பெரிய ராஜத் துரோகச் செயல். பிஷப்பைப் பார்த்து கேட்டேன்! "நீர் ஏன் சும்மா பார்த்துக் கொண்டிருக்கின்றீர்" என்று. "அவனோடு சேர்ந்து உதைக்கவா சொல்லுகிறாய்?" என்றல்லவா அவர் கேட்டார். ஒருவர் பரலோகத்துக்குப் பாதை காட்டுகிறவர். மற்றொருவர் படையை நடத்திப் பாரை ஆள வேண்டிய மகாப் பிரபு. என்னை ஏன் அடிக்க வேண்டும்? நாட்டை நாசப் படுத்துகிறானே வார்விக் — அவனும் அவனது ஆட்களும்-- அவனை அடித்து விரட்டுவது தானே இவர்கள்? நான்தான் கோழை! போருக்குப் பயந்தவன்! இன்னும் என்னவெல்லாமோ! எனக்கு மணி முடியில்லை! என்றாலும் நானும் மன்னன்தான். இவைகளை யார் செய்வது,

ஒருநாள் வாகொல்லர்ஸிலிருந்து ராபர்ட் பாட்ரிகோட் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். நான் அதை இவர்களுக்குப் படித்துக் காட்டியபோது எவ்வளவு ஆத்திரப் பட்டார்கள்.

"முட்டாள் — ஒரு கிராமப் பெண்ணை — பட்டிக்காட்டுப் பாவையை இங்கே அனுப்பிவைக்கிறானாம். அதுவும் பிரஞ்சுநாட்டைக் காப்பாற்ற; வெட்கம்! ராபர்ட்டுக்கு மூளை குழம்பிவிட்டதோ என்னவோ தெரியவில்லையே!" இப்படித்தான் பிஷப்பும் —டிரிமூலியும் வாயில் வந்ததை யெல்லாம் உளறினார்கள். அந்தக் கிராமப் பெண்ணிற்காக நான் வாதாடினேன்.

"அவள் நேரடியாக என்னைப் பார்க்க வருகிறாள்! வேறு யாரையும் அல்ல! என்னை! பிரஞ்சு நாட்டு மன்னனை

அவள் பார்க்க வருகிருள்! உங்களை அல்ல!'' என்று நான் ஆத்திரப்பட்டுக் கூறிவிட்டேன்.

“வெறி பிடித்த அந்த நாயை இங்கே அனுமதிக்கமாட்டோம்!” என்று அந்தப் பிஷப் கூறியபோது உண்மையில் நான் நடுங்கிவிட்டேன், என் நடுக்கத்தை வெளிக் காட்டாத முறையில் என்னை நானே சமாளித்துக் கொண்டு “நான் மன்னன்! சார்லஸ் டாபின்! நீ யல்ல! அவசியம் அவளை வரவேற்கத்தான் போகிறேன்!'' என்று முழங்கினேன். ''மதிப்பும் அந்தஸ்தும் எதுவுமற்ற ஒரு கிராமப்பெண். பெண்களுக்குரிய குணம்—அச்சம், நாணம் ஒன்றுமில்லாதவள்—ஆணுடை தரித்த அகங்காரி! அதுவும் போர்வீரனைப் போல் ஆடை அணிந்து கொண்டுள்ள போக்கிரிப் பெண். நாலு பேர் பின் தொடர வரும் அவளை அரண்மனைக்குள் அனுமதிப்பதே ஆபத்து!” இப்படி பிஷப் அபாயச் சங்கு ஊதினர்.

“இதற்கெல்லாமா நான் கவலைப்படப் போகிறேன்? இல்லை. அவளை நான் அனுமதிக்கத்தான் போகிறேன். அவள் விஷயந் தெரிந்தவள்'' விவேகமானவள், எதையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவளுக்குண்டு. அவரவர் முகங்களிலிருந்தே அவர் தம் உள்ளங்களைத் தெரிந்து கொள்ளும் வல்லமை அவளுக்கிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டால், ராபர்ட் எனக்கு இதுபற்றி எழுதியிருக்கமாட்டானே! இவளை இங்கே அனுப்பியுமிருக்கமாட்டானே! உண்மையிலேயே அவள் ஒரு புனித மங்கைதான்.” என்று கூவிவிட்டேன்.

“புனித மங்கையா? அந்தக்கிராமப் பெண்ணு? சார்லஸ்! விபரீதம் பேசுகிருய்! அது தேவாலயத்தின் உரிமையாயிற்றே! ஒருவரை புனிதகுருவாகவோ—புனிதமங்கையாகவோ மாற்று

கின்ற சக்தி தேவாலயத்திற்குத் தவிர வேறு எதற்கும் கிடையாதே! அந்த சக்தியை நீ கேலி செய்கிருய்! எவனே எழுதினுைம், அனுப்பிவைத்தானும்! கதை பேசுகிருய்!" "பிஷப்--லா டிரிமூலி எல்லோரும் சேர்ந்து இப்படி உரக்கக் கத்த ஆரம்பித்தார்கள். என் காதே செவிடாகும் போலிருந்தது.

"நான் நம்புகிறேன். ராபர்ட், நீங்கள் கருதுவது போலக் கழுதையாகவே இருக்கட்டும். ஆனல் நல்ல போர் வீரன். அந்த வீரனின் வார்த்தைக்கு படைவீரர்களின் வரிசையிலே நல்ல செல்வாக்கு உண்டு. அவர்கள் அவன் பேச்சை நம்புவார்கள். எனவே ஜோனைப் பற்றிய ராபர்ட்டின் கருத்து படைவீரர்களின் கருத்தாவதிலே நம்பிக்கை இருக்கிறது" என்று முடித்துவிட்டு அலட்சியமாகத் தொலை தூரத்திலே என் பார்வையைச் செலுத்தினேன்.

"அப்படியானல்"—பேச ஆரம்பித்தான் டிரிமூலி. நான் திரும்பிப் பார்த்தேன்.

"அந்தப் பாசாங்குக்காரி உண்மையிலேயே அறிவும் அறிவொளியும் உள்ளவளானல், உன்னைத் தெரிந்து கொள்ள வேண்டும்" ஏதோ பெரும் புதிர் போட்டு விட்டவனைப் போல் என்னைப் பார்த்தான்.

"விளக்கமாகச் சொல்" என்று நான் கேட்டேன்.

"மன்னனுக" புளுபியர்ட்—கில்ஸ்-டி-ரே வேஷம் போட்டுக் கொள்ள வேண்டியது" என்று முடிப்பதற்குள் நான் அதை முடித்தேன்,'

சரி! சரி! அந்தப் பெண் என்னைக் கண்டு கொள்வாளானல் நம்புவீர்களல்லவா? "நம்புவோம்" என்றனர் மற்றையோர். நான் அதற்குத் தயாரானேன்.

அரச சபை கூடுவதற்கு ஏற்பாடாயிற்று! புளூபியர்ட் அரச வேஷம் தரித்துக் கொண்டான். ஆசனத்திலும் அமர்ந்து விட்டான். நான் மற்ற பிரபுக்களின் மத்தியில் சாதாரண உடையில் ஒளிந்து கொண்டிருந்தேன். பிரஞ்சுப் பெண் ஜோனை அழைத்துவர ஏற்பாடாயிற்று! நம்பிக்கை எவ்வளவோ இருந்தாலும் என் உள்ளம் படபடவென்றடித்துக் கொண்டது. வருபவள் எப்படியிருப்பாளோ! என்னை அடையாளம் கண்டு கொள்வாளா? என்ன பேசுவாள்? என்ற எண்ணங்கள் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. என்னைக் கேலி செய்வதும்—அதட்டுவதும் அடக்குவதும் தொழிலாகக் கொண்ட இவர்கட்கு இது ஒரு நல்ல பாடமாக அமையலாமல்லவா? நினைக்கும்போதே நான் பூரித்துப் போனேன்.

"பிரெஞ்சு நாட்டின் நிலை பரிதாபத்திற்குரியது! வந்தவர்களெல்லாம் அடக்கி ஆண்டு ஆட்டிப் படைக்கும் அளவிற்கு என் தாயகம் தாழ்ந்து விட்டதே! நானே பொம்மை மன்னனாக இருக்கிறேன். மதிப்பில்லை! மரியாதை இல்லை! வந்துவிட்ட ஆங்கில நாட்டு வேட்டை நாய்களோ மோப்பம் பிடிக்கின்றன. இந் நிலையில் என்னை மன்னனாக்குகிறேன் என்று கூறும் அந்தப் பெண்—எவ்வளவு தைரியசாலி! ஆங்கிலேயரை விரட்டுகிறேன் என்றல்லவா சொல்லுகிறாளாம்! எவ்வளவு துணிவு! நானும் ஒரு ஆண்தானே? வயது 26 ஆகிறது! துடிப்புள்ள பருவம்! இருந்தும் என்ன? போர்க்களத்திலே பாயும் புலியைப்போல் குதிக்கவேண்டிய இளமைதான், ஆனாலும் வாளெடுக்கவே கை நடுங்குகிறதே! போர் உடை வேறு தரித்திருக்கிறாளாம்! அம்மம்மா! நினைக்கவே முடியவில்லை. என் வாழ்நாளிலே இப்படிப்பட்ட துணிச்சலான காரியத்தைச் செய்ய நான் ஒரு நாளும் ஒப்பியதில்லை. அவள் தெய்வத் தன்மை கொண்டவளாகத் தானிருக்கவேண்

டும். எது எப்படியானுல் என்ன? அவள் தெய்வீகத் தன்மை வாய்ந்தவளானுல் என்ன? சாதாரண கிராமப் பெண்ணுனுல்தான் என்ன? எனக்குத் தேவையானது அரச வாழ்வு. நான் முடி தரித்த மன்னனுக வேண்டும். அதற்காக யார் தான் மாண்டாலென்ன? வாழ்ந்தாலென்ன?

ஒரு வேளை கேலிக் கூத்தாகவே இருக்கலாமோ? அப்படியானுல் ராபர்ட் ஒப்பியிருக்கமாட்டானே! அவனது கடிதத்திலே அவன் இதயத்தையே காணமுடிகிறதே! ஒரு வேளை அவளால் முடியாதென்ருலும் உடனடியாக எப்படி முடிவு கட்டுவது? சந்தர்ப்பம் அளிப்பதுதானே முறை. சந்தர்ப்பங்கள் வழிகாட்டினுல் தானே கோழையும் சந்தர்ப்பவசத்தினுல் புலியாக மாற முடியும்! இந்தஉண்மை என்னைப் பொறுத்தமட்டில் பொய்த்துவிட்டிருக்கலாம்! ஆகவே இது பொய் என்று நான் தீர்மானிக்கலாமா? என்னைவைத்தே உலகை நான் அளவிடக்கூடாது.

கிராமப்பெண்! கரத்திலே வாள்! கத்தரிக்கப்பட்ட தலைமயிர்—போர் உடை! புரவி மீது சவாரி! போர்க்களம் நோக்கிப் பயணம்! எனக்கே வீரம் வரும் போலிருக்கிறதே. ஏன் அவள் இந்த தியாக பணிக்குத் தன்னைத்தேர்ந்தெடுத்துக் கொண்டாள்! வேறு வேலையில்லாததினுலா? அல்லது இதிலே ஓர் ஆசையா? இல்லை! இல்லை!—ராபர்ட்டின் கடிதம் குறிப்பிடுவது போல, உண்மையிலேயே நாட்டுப்பற்றுகத்தானிருக்க வேண்டும். என்னைச் சுற்றியிருப்பவர்களோ தேசத் துரோகிகள்—ஆனுல் என்னைக்காக்க வரும் பெண்—இளவயது, அழகி என்று கூடக் கூறுகிருர்கள். உலக இன்பங்களைத் துறந்து தாய் தந்தையர்களை மறந்து தன்னலம் பேணுமல் புறப்பட்டிருக்கிருளே!

'ஏன் எனக்கிந்த தொல்லை'? என்று வாளாயிருக்கலாம். பின்னல் வேலை செய்து—ஓய்ந்த நேரங்களில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு நன்ருக வாழலாம். தொல்லைகளால் பின்னப்பட்ட அரசியல் நெருக்கடியில்—போராட்டச் சுழற்சியில் — ஏன் அவள் தானுகவே சிக்கிக் கொள்ள வேண்டும். இதை உணர்ந்து பார்க்கும் உள்ளம் படைத்தவன் எவனுமே இங்கில்லை. டிரிமூலி எவ்வளவு கேலி செய்கிருன்! அதற்குக் காரணம் இப்போது தான் புரிகிறது. அவன் பர்கண்டி மாகாண கவர்னருக்கு வேண்டியவன். கவர்னரோ எனக்கு எதிரி. என்ருலும் என்ன செய்வது? அவனை எதிர்க்க வழியில்லை. நானே கடனுளி! கட்டுப்பட்டவன். அவன் பணத்தை எப்படியாவது கொடுத்து விட்டால் எவ்வளவு மனநிம்மதி எனக்கேற்படும். ஜோன் அந்த உறுதிமொழியுங் கூட எனக்குத் தருவாளானுல்—ஆஹா! நான் பேரின்ப வெள்ளத்திலே அல்லவா மிதப்பேன்?

என் மாமி! சிசிலி நாட்டு அரசி! அவள் வேறு ஜோனின் வரவை எதிர்பார்க்கிருள். இருக்காதா என்ன? எனக்குப் பெண் கொடுத்தவளாயிற்றே! என்னைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்யும் தறுதலைகளிட மிருந்து காப்பாற்ற ஜோன் உதவுவாள் என்றே அவளும் நம்புகிருள். எதற்கும் பொறு மனமே பொறு! அவள் மண்டபத்திற்குள் நுழையட்டும். பிறகு பார்க்கலாம்.

———

# ஜோன்

சினன் அரண்மனைக்குள் உடனடியாக நான் நுழைய முடியவில்லை. ஏற்கெனவே காலதாமதம் ஏற்பட்டதால் நான் மிகவும் மனவேதனை அடைந்திருந்தேன். ஓரடி முன்னென்றல் ஈரடிபின் என்றமுறையிலேயே என் முன்னேற்றம் நிகழலாயிற்று. நான் உள்ளே நுழைவதற்குத் தடைகல்லாக இருந்தவர் யார் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். அவன் தான் லா டிரிமூயிலி! ஏற்கனவே படைநடத்தித் தோற்றேடியவன்! தூய உள்ளமற்றவன்! ஆபத்திலே சிக்கிக் கொள்ள எந்தக் காலத்திலும் விரும்பாதவன். அவன் தனது தோல்வியைப் பற்றி நாணித்தலைகுனிவதை விட்டு, "ஒரு பெண் போர்க்களத்திலே எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று, எனக்கு கட்டளை யிடுவதா? அதை நான் தலை தாழ்த்தி வரவேற்பதா? முடியாது!" என்று கூறி மறுத்து விட்டானும். எவ்வளவு பெரிய உண்மையைக் கண்டு பிடித்து விட்டான். தோற்றேடுபவர்களுக்கு இது இயற்கை போலும். தமது வீழ்ச்சிக்கு ஆயிரம் காரணங்களைக் காட்டுவார்கள். அவர்களின் உறுதி இன்மையையும் திறமையின்மையையும் மூடிமறைக்க இதைத்தவிர வேறு வழிகிடையாது! ஐயோ, பாவம்! சரி! எப்படியோ தொலையட்டும்! கடைசியாக என்னை உள்ளே வர அநுமதித்தார்கள். நானும் நுழைந்தேன்.

இராஜப்பிரதானிகள் - பிரபுக்கள் எல்லோரும் புடைசூழத்தொலைவில் போடப்பட்டிருந்த அலங்காரமான பீடத்தில் மன்னன் உட்கார்ந்திருந்தான். அவையில் நுழைந்த நான் திடுக்கிட்டுப் போக வில்லை; அல்லது என்ன செய்வதென்று

தடுமாறி விடவில்லை. நிதானமாக அங்கே கூடியிருந்தோர் எல்லோரையும் பார்த்தேன். அவர்களின் கண்கள் என்னை அச்சுறுத்துவதைப்போல் கூர்ந்து நோக்கின. ஆனால் எந்த விதத்திலும் அவைகள் என்னை பாதிக்க முடியவில்லை. நான் வந்த காரியம் இதுவல்லவே! எனது கடமை எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. எனது முயற்சியிலே எனக்கேற் பட்ட நம்பிக்கை என் உள்ளத்தில் உள்ள சலனத்தை விரட் டிற்று. இயற்கையிலே எனக்கு அச்சம் கிடையாது! அவ் விதமான சூழ்நிலையில் நான் வளர்ந்தவள். நான் எதையும் பொருட்படுத்தாமல் நேரடியாக அரசன் அமர்ந்திருக்கும் அரியணையின் பக்கமாகச் சென்றேன். மன்னன் தன் பற்க ளெல்லாம் தெரிய உட்கார்ந்திருந்தான். பக்கத்திலே சென்று வணங்குவதற்கு முயற்சித்தேன். கூர்ந்து கவனித்தேன். கவனித்த நான் திடீரென்று பின் வாங்கினேன். எனக்கு ஏற் கனவே சொல்லப்பட்ட 'சார்லஸின்' உருவத்திற்கும் இதற் கும் ஏராளமான வேறுபாடுகள்! முன்னர் என்னிடம் சித் தரித்துகாட்டப் பட்ட சார்லஸின் உருவத்தை என் மனக்கண் முன் கொண்டு வந்தேன். 'பாலியும் ஜானும் என்னை ஏமாற்ற மாட்டார்களே? உண்மையிலே அவர்கள் என்னை முற்றும் நம்பி அன்புடன் நடத்துபவர்களாயிற்றே! ஏன் என்னை ஏமாற்ற வேண்டும்?' ஏமாற்றும் முயற்சி மன்னன் மண்ட பத்தில் தான் நடக்க வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டேன். அந்த முடிவு என்னை உண்மையான சார்ல சைத்தேடிப் பார்க்கத் தூண்டிற்று!.

சுற்று முற்றும் பார்த்தேன். என் கண்கள் அரியணை யின் பின்னல் நின்ற கூட்டத்தோடு கூட்டமாக நடுங்கிக் கொண்டும் தன்னை மறைத்துக் கொண்டும் நின்று கொண் டிருந்த மன்னனைக் கண்டு விட்டேன். உடனே அவரிடம்

விரைந்து சென்று மண்டியிட்டு வணங்கினேன். சபையிலிருந்தோர் குசு குசுவென்று அவர்களுக்குள்ளே என்ன என்னவோ பேசிக்கொண்டார்கள். எதைப்பற்றிப் பேசிக் கொண்டார்களோ அறியேன். ஒருவேளை நான் உண்மையான மன்னனைக் கண்டுபிடித்து விட்டேன் என்பதற்காகக் கூட இருக்கலாம்.

மன்னன் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்ருர்.

அங்குக் கூடியிருந்தவர்களிடம் 'என் உடலிலே ஓடும் ரத்தம் அரச ரத்தம்; அது இப்போது மங்கை ஜோனுல் நிரூபிக்கப்பட்டுவிட்டது;' என்று கத்தினுர். முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனுல் பிறகு தெரிந்தேன் எனது திறமையை இவ்வாறு பரிசோதித்தார்களென்று.

அரியணையில் அமர்ந்திருந்த போலி மன்னனின் பக்கத்தில் வீற்றிருந்த (ஆர்ச்பிஷப்பிற்கு) பெரும் பாதிரியாருக்கு என்னை அறிமுகப்படுத்தினுர் மன்னர். நான் அவரை வீழ்ந்து வணங்கினேன். என்னை வாழ்த்தினுர் அவர். எல்லோருக்கும் நான் அறிமுகப்படுத்தப்பட்டேன். அனைவரும் என்னைப் புன்முறுவலோடு பார்த்தனர். ஆனுல் ஏனே தெரியவில்லை மன்னனுக வேஷமிட்டு என்னை ஏமாற்ற முயற்சித்த 'புளுபியர்ட்' மட்டும் எரிச்சலோடு உட்கார்ந்திருந்தான். அவன் ஒவ்வொரு முறையும் பாதிரியை எதிர்த்தே பேசிக்கொண்டிருந்தான். எனக்குக் கொஞ்சங்கூட அது பிடிக்கவில்லை. பாதிரியாரை எதிர்த்துப் பேசுகிருனே என்பதற்காக நான் வெறுக்கவில்லை, ஒவ்வொரு முறையும் அனுவசியமாக எதிர்ப்பதே அவனது பேச்சாக இருந்தது. யாருக்கும் கோபந் தானேவரும்!

"எவ்வளவு துணிச்சல்!—ஆர்ச்பிஷப்பையே எதிர்த்துப் பேசுகிறனே?" என்று நான் கேட்டுவிட்டேன். இந்தக்கேள்வி புளுபியர்டை ஆத்திரங் கொள்ளச் செய்தது. இதைக் கண்ட ஆர்ச்பிஷப் உடனே 'இவள் கடவுளின் ஆசீர்வாதமும் அருளும் பெற்று வந்திருக்கிறாள். நாம் இவளை மதித்தே நடந்து கொள்ள வேண்டும்'' என்று ஆணையிடுவதுபோல் கூறினர்.

இந்த உறுதிமொழி சார்லசுக்குக் கைகொடுத்தது. அவர் என்னை அவரது அறைக்கு அழைத்துச் சென்றார். நீண்ட நேரமாகப் பல விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோம். தயை செய்து அதைப்பற்றிக் கேட்டுவிடாதீர்கள். அது ரகசியமானது. அரசாங்க ரகசியத்தை வெளியே சொல்வது முறையாகாது. எனவே அதுபற்றி எதையும் கூற நான் விரும்பவில்லை. ஒரு விஷயத்தை மட்டுமே தெரிவிக்கலாம். "நிச்சயமாக ஆங்கிலேயர்களை விரட்டிவிடமுடியுமா? நான் அதிகார பூர்வமாக அரசனாக முடியுமா? ஆர்லியன்சைக்கைப்பற்ற முடியுமா?" என்று ஆத்திரத்தோடும் உணர்ச்சிப் பெருக்கோடும் சில கேள்விகளைக் கேட்டார் மன்னர்.

முடியும்!—ஆகலாம்!— கைப்பற்றலாம்!— தயங்கவேண்டாம்!— பயப்படாதீர்!— என்று கூறி அவருக்கு நம்பிக்கை உண்டாக்க முயன்றேன். எனது வார்த்தைகள் நீண்ட நேரம் வரை மன்னனின் காதுகளிலே ஏறவில்லை.

"நான் எப்படிப் பயப்படாமலிருக்க முடியும்? எனக்குத் தோல்வி கூட்டுத் தோழன். நான் போர்க்களம் செல்லவே மாட்டேன். முடிந்தவர்கள் செல்கிறார்கள்! எனக்கென்ன? நான் என்ன மன்னனாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்? என் தலையிலே அதைத்தூக்கி வைத்துவிட்டார்கள். நானே போரையே விரும்பாதவன்! சமாதானப் பிரியன். எனக்

கேன் இந்தத் தொல்லைகளெல்லாம்? நீ நினைக்கிறபடி என்னால் ஒன்றும் செய்வதற்கில்லை. வேண்டுமானால் நீயே செய்! என்னைக் காப்பாற்று, நான் மன்னனாக இருக்க இசைகிறேன். நான் வேறென்ன செய்ய முடியும்?'' என்று விம்மி விம்மிக் கூறினார்.

ஒரு விதமாகச் சொல்லிச் சமாதானப் படுத்தினேன். சார்லஸ் மன்னனின் நற்குணங்களை நான் தெளிவாக அவரது பேச்சின் மூலம் அறிந்தேன். உண்மையிலேயே சார்லஸ் நல்லவர். தூய்மையான உள்ளம் அவருக்கிருந்தது. ஒன்றும் தெரியாத அப்பாவி. பரிதாபத்திற்குரியவர் - எடுப்பார் கைப் பிள்ளையாகவே இருந்தார். யார் எதைச் சொன்னாலும் கேட்டு நடக்கும் குணம் படைத்தவர். அவர் பேச்சைத் தொடர்ந்தார்.

“நான் பலர் நினைப்பதைப்போல பைத்தியக்காரனுமல்ல சிலர் சொல்வதைப்போல முட்டாளும் அல்ல. பத்து போராட்டங்களைவிட ஒரு சமாதான உடன்படிக்கை எவ்வளவோ மேலானது. போரட்டங்களிலே உருவாகும் அத்தனை பலன்களையும் ஒரு உடன் படிக்கை மூலம் இந்த வெறியர்கள் இழந்து விடுகிறார்கள். உண்மையிலே நாம் ஆங்கிலேயர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டால் அதனால் நஷ்டம் அவர்களுக்குத்தான்; ஏனென்று கேட்கிறாயா? அவர்கள் சிந்திப்பதைவிட போர் நடத்துவதிலே வல்லவர்கள்!''

சார்லஸின் இந்த வார்த்தைகள் எனக்குச் சிரிப்பை மூட்டின!

“இல்லை மன்னா! ஆங்கில நாட்டான் போரில் வெற்றிக் கொடி நாட்டினால், பின்னர் உருவாகும் ஒப்பந்தத்தில் கட்டளை இடுபவன் அவன்—ஆணைபிறப்பிப்பவன் அவன்—தண்டனிட வேண்டியவர் நாம், அதனால் நமது உரிமை வாழ்வின்—விடுதலை முழக்கத்தின் குரல் வளை நெறிக்கப்படுமே! நமது

வீழ்ந்துபோன சுதந்திரக் கொடியின் புதைக் குழியி லல்லவா அவர்களின் வெற்றி மாளிகை எழுப்பப்படும்! அங்கே தலைநிமிர்ந்து ஒளிவிடும் கொடி ஆங்கில நாட்ட தாகுமே? அதை எப்படி நாம் ஏற்கமுடியும்? கூடாது அரசே! கூடாது! அந்த அச்சம் நமக்கு வேண்டாம்! நாம் அவசியம் போராடித்தானாகவேண்டும். வெற்றி தோல்வியைப்பற்றிக் கவலை ஏன்? உடல்கள் துண்டாகப் படட்டும்! எரி உண்ணட்டும் நமது உடல்களை; கவலை யில்லை! தூக்குமேடை தருகிறார்களா? தாங்கிக் கொள் வோம்! இதற்காக நமது தாயகத்தின் உரிமை மூச்சையும் விடுதலைக் குரலையும் ஒடுக்கி அணைக்க இடந்தரலாமா? எதிர்த்தே ஆகவேண்டும்! என்னை நானே அதற்கு அர்ப்பணிக் கிறேன்!'' என்று ஏதேதோ உணர்ச்சிவயப் பட்டவளாய்ப் பேசினேன். இருந்தாலும் சார்லஸுக்கு உள்ளத்தைத் திடப் படுத்திக்கொள்ள முடியவில்லை. முடியவில்லை என்பது மட்டு மல்ல எத்தனையோ அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டார். அவர்மனைவியின் உடையிலிருந்து, கடன் தொல்லையிலிருந்து மீள்வதுவரைப் பேசினார். எவ்வளவு தொல்லைகள் நிறைந்த இருண்ட காட்டில், திக்குத் தெரியாமல் உலவினார் தெரியுமா? பாவம் சார்லஸ்! எதிர்காலம் ஒரே பயங்கரமாகக் காட்சி யளித்ததுபோலும்! யாரையும் நம்ப மறுத்தார்.

சார்லசைக் குறை கூறிப் பயனில்லை. அவரைச் சூழ்ந் திருந்தவர்கள் அவ்வளவு ஆபத்தானவர்கள். எந்தச் சந்தர்ப் பத்திலும் அவரை ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண் டிருந்தனர். எதைப்பற்றியும் சந்தேகந்தான். இந்தச் சந்தர்ப் பத்தில் சார்லஸுக்குப் போர்க்களக் காதை பிடிக்குமா? வேதனை விருத்தம் பாடிக் கொண்டிருந்த அரசனுக்கு நான் போர்ப்பரணி பாடினேன். எனது முயற்சியிலே நான் வெற்றி

யும்பெற்றேன். இறுதியில் தைரியம் அடைந்தவர்போல் சார்லஸ் எழுந்தார். வெளியில் விரைந்து சென்று தன் ஆசனத்தி லமர்ந்து கொண்டார். பேசவும் செய்தார். பேசவில்லை கட்டளை இட்டார்.

"இந்தப் படையை நடத்திச் செல்லும் தலைமைப் பொறுப்பை இதோ என்முன் நிற்கும் பிரஞ்சுப் பெண் ஜோனுக்களிக்கிறேன். அவள் விருப்பப்படியே செயல் திட்டங்கள் வகுக்கப்படட்டும்!"

இப்படி சார்லஸ் ஆணைப்பிறப்பித்துவிட்டு ஆசனத்தை விட்டு கீழே இறங்கினர்! எங்கும் ஒரே பரப்பரப்பு! யாரும் எதிர்பாராத முடிவை எதிர்பாராத முறையில் சார்லஸ் அங்கே குழுமியிருந்தவர்களுக்கு அறிவித்து விட்டார்.

லா ட்ரமூலியின் கண்கள் ஆத்திரத்தால் நெருப்பைக் கக்குவதுபோல் செந்நிறம் பெற்றது!

"என்ன இது சார்லஸ்! நான் படைநடத்தவா?". மன்னன் இதற்கு பதிலளிக்க முயலுவதற்குள் நான் அவரது கவனத்தை வேறு பக்கத்தில் திருப்பினேன். தாங்க முடியாத மகிழ்ச்சியில் மூழ்கிவிட்ட என் உள்ளம், என் உறையிலே தூங்கிக்கிடந்த என் ஒளிவீசும் உடைவாளை வெளியே எடுக்கத் தூண்டிற்று! என் கனவு நனவாவதைக் கண்டு பூரித்துப் போனேன். கரத்திலே வாளேந்தி இப்பொழுதே ஆர்லியன்சை நோக்கிப் புறப்பட்டுவிட்டது போல் தோன்றிற்று. வீரர்களே தயார் என்ற என் கேள்விக்குப் படை முழுவதும் தயார் தயார்" என்றளித்த விடை வானைப்பிளந்தது; அவரவர் உடைவாட்களும் வெற்றி முழக்கம்போல வான மண்டலத்தில் ஒலித்தன. எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியேறினோம். லா ட்ரிமூலி மட்டும் ஏதோ முனகிக் கொண்டே அங்கு நின்று கொண்டிருந்தான்.

# போர் வீரன்

பிரஞ்சு நாட்டின் விடுதலைக்குப் போராட முன் வந்த "பிரஞ்சுப் பெண்" ஜோனின் படை வீரர்களிலே நானும் ஒருவன். ஆங்கிலேயர்கள் ஆர்லியன்ஸை முற்றுகை இட்டிருந்ததால் பிரஞ்சுப் படையினர் ஏராளமாகச் செத்து மடிந்துக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் போராடியவன் நான். களத்திலே எழும்பும் திடுக்கிடச் செய்யும் பயங்கரமான ஒலி— பிரஞ்சு வீரர்களை மேலும் விரட்டியடித்தது. ஆங்கிலேயர்கள் எழுப்பிய "ஹுரே" என்ற இடியோசை பிரஞ்சு வீரர்களின் இரத்தத்தை பனிக்கட்டியென உறையச் செய்தது. உணர்ச்சி இழந்து நம்பிக்கை நாசமாகி - நாளை யென்னாகுமோ என்ற நினைவுகளால் நடுங்கிக் கொண்டிருந்த பிரஞ்சு வீரர்கள் களத்திலே தேவைப் படும் வீரத்தையே இழந்து விட்டார்கள். அதன் விளைவாக ஆங்கில நாட்டார் வேகமாக முன்னேறலாயினர். ஆர்லியன்ஸைத் தம் அடிமைப் படுத்திக் கொண்டனர். பிரஞ்சுப் படையை முன்னால் நடத்தியவன் தான்—தளபதி லா ட்ரி மூலி. காலங் கடத்துவதும் அனாவசிய சர்ச்சைகளும் அவனது போர்க்கள கொள்கைகள், ஆபத்து என்றால் தான் முன்னிற்காது ஓடிமறைந்துக் கொள்வான். எளிதாக வெற்றி மாலைக்கு கழுத்தை நீட்டி நிற்பான். வெற்றி இரத்தக் கால்வாய்களைத் தாண்டித்தான் வருமென்றால் தளபதியின் உள்ளம் தளர்ந்து போகும். அப்படியும் ஒரு வெற்றி ஏன் என்பான். தோல்வி ஏற்பட்டு அதன் விளைவால் வீரர்களின் உள்ளத்தில் சோர்வு தட்டினால் தளபதி அதைக்கண்டு கவலை கொள்ள மாட்டார். கனல் பொறி பறக்கும் உணர்ச்சி மிக்க வீரவுரைகள் தேவைப் பட்ட போர்க் களம் லா ட்ரி மூலிடமிருந்து பெற்ற தெல்லாம் உணர்ச்சியற்ற வெறும்

பரிதாபக் கதறல்கள்தான். வீரர்களை உருவாக்க வேண்டிய தளபதி—உருவாக்கி கர்ஜிக்கும் சிங்கங்களாக நடமாடச் செய்ய வேண்டிய தலைவன்— உட்கார்ந்த இடத்திலேயிருந்துக் கொண்டு-- நாடு எக்கேடுக் கெட்டால் எனக்கென்ன என்றிருந்தால் பலன் என்னவாகும்? என்னைப் போன்ற ஏராளமான போர் வீரர்கள் வீணுகச் செத்து மடிந்தனர். வீரர்கள் தாமாகப் போராடி மாண்டார்களென்ருல் கூட நான் மகிழ்ந்திருப்பேன். இல்லை! அவர்களை பைத்தியக்காரத் தனமாக தளபதியின் திறமை யின்மை ஆபத்திலே சிக்க வைத்தது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் தான் "வீரப் பெண் ஜோன் வருகிருள்" என்ற செய்தி எங்கள் காதுகளுக் கெட்டியது. அதுவரை அவளை நான் பார்த்ததில்லை ஆமாம்-- சந்தர்ப்பமோ, அவசியமோ நேர வில்லை.

1429-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் நாள் ஆர்லியன்சை நோக்கிப் படைகள் புறப்பட்டன. பிரஞ்சு நாட்டின் மார்ஷல்கள்—டுனேய்ஸ், போசாக்-டி-சிவியர்,—கில்ஸ்-டி-ரெய்ஸ், குறிப்பிடத்தகும் காஸ்கன்—எட்டினே-டி-விக்னேஸ், மேலும் பாலி—ஆலன்-ஜாக்-ஜான் இவர்கள் பின் தொடர, ஜோன் தலைமையில் நாங்கள் சென்றுகொண்டிருந் தோம்.

"இதுவரை பிடித்த நகரங்களைவிட்டு வெளியேறுங்கள்! இல்லையேல் ஆபத்தை அணைத்துக் கொள்வீர்கள் என எச்சரிக் கின்றேன். நன்ருகவும் ஒழுங்காகவும் நடந்துகொள்ள உங்களுக்கு வாய்ப்பளிக்க நான் தயார்! போர்க்களமே பிரச்னைக்குப் பதிலென்ருல், பிரஞ்சுப் போர்வீரர்களின் தினவெடுக்கும் தோள்களுக்கு ஒரு வாய்ப்பென்றே நான் கருதுகிறேன்"

எவ்வளவு துடுக்கான வார்த்தைகள்? ஆம்! எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. பாய்டியர்ஸிலிருந்து ஜோன் இங்கிலீஷ் ரீஜண்டுக்கு இப்படி ஒரு கடிதம் தீட்டினள். அந்தக் கடிதம் காட்டும் உறுதி ஆங்கிலேயர்களை அச்சுறுத்தி அப்பகுதியை விட்டே விரட்டும் என்று அவள் நம்பினுள். ஆங்கிலேய ரீஜண்டுக்கும் படைத்தளபதிக்கும் சேர்த்து அனுப்பிய ஓலை தான் அது. அந்த வார்த்தைகள் ஆங்கிலத் தளபதி பெட் போர்டின் மனதைச் சுட்டிருக்காதா? அதுபற்றி ஜோனே நாங்களோ கவலைப்படவில்லை! ஜோனின் வருகைக்குப்பிறகு வெள்ளுடை தரித்த அந்தப் போராட்ட வீராங்கனையின் உள்ளத்தைத் தட்டி எழுப்பும் ஆவேசப் பேச்சிற்குப் பிறகு சோர்ந்துகிடந்த எனது நண்பர்கள் சீறும் புலிகளாயினர். அவளது தோற்றமே எங்கள் உள்ளத்திற்கு ஒரு புத்துணர்ச் சியை ஊட்டியது. ஆங்கிலேயரின் வெற்றிக் கூச்சல் தனது வலுவை இழக்க ஆரம்பித்தது. அந்தக் குரலை மிஞ்சிவிடும் முறையிலே பிரஞ்சு வீரர்களும் முழங்க ஆரம்பித்தனர்.

"ஜோனுக்கு வெற்றி" பிரஞ்சு நாட்டுக்கு வெற்றி. ஜோன் போரிலே பழக்கப்பட்டவளல்ல! போர்க்களம் அவள் இதுவரைக் கண்டறியாததுதான், ஆனல் சிறந்த போர்த்தலைவனுக்குரிய ஓர் உயர்ந்த குணம் அவளுக்கிருந்தது. அதுதான் தோல்வியை ஒப்புக்கொள்ளாத பண்பு, தோல்வி எழக்கண்டும் சளைக்காத உள்ளம், கலங்காத நெஞ்சுரம்.

ஏப்ரல் 29 ஆம் நாள்! போர் உடைதரித்த பெண்—வீர வாளேந்தி நாலாயிரம் படைவீரர்கள் பின் தொடர **அலன்கன் டியூக்** அணிநடை போட ஆர்லியன்ஸ் தளபதி டுனேய்ஸோடு சேர்ந்துகொண்டோம்.

ஜோன் வந்து சேர்ந்த பிறகு எங்கள் நிலையே மாறி விட்டது! வரலாறே திரும்பிற்று! போராட்ட வரலாற்றிலே இதுவே பெரியதோர் திருப்புமையம். அதுவரை பின்வாங்கிக் கொண்டிருந்த நாங்கள் ஜோன் களத்திலே வந்து சேர்ந்த பிறகு துணிந்து முன்னேற ஆரம்பித்துவிட்டோம். இருநூறு ஆங்கிலேயர்கள் ஐயாயிரம் பிரஞ்சு வீரர்களைத் தலைகால் தெரியாமல் ஓடவைத்த நிலைமை தோன்றி மறையும் வானவில் போல் மறைந்தது. உறங்கிக்கிடந்த நாங்கள் உணர்ச்சியும் உற்சாகமும் பெற்றோம். உத்வேகத்தால் உந்தப்பட்ட நாங்கள் எங்களுக்குக் கிடைத்த மாபெரும் வீரமகளை எண்ணி எண்ணிக் களிப்புற்றோம்! போர்க்களத்திலே பொறுப்பற்ற முறையிலே உயிருக்கஞ்சி ஒதுங்கி நின்ற லாட்ரிமூலி எங்கே? போர்வீரர்களின் உள்ளத்தை எஃகாக்கி, நாட்டு வெறியை ஏற்படுத்திப் பாயும் புலிநிகர் மாந்தர்களாக்கிய புரட்சிப் பெண் ஜோன் எங்கே? ஜோன்! அவள் ஒரு உணர்ச்சித் தீ! புரட்சிப் புயல்! சுழன்றடிக்கும் சூருவளி! அந்த வீர மகளின் கட்டளைக்குக் காத்துக் கிடந்தோம் நாங்கள்!

களத்திலே ஜோன் பெண்ணாகக் காட்சியளிக்க வில்லை. ஆணுடை தரித்து, ஆணினும் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து ஒரு கையிலே லில்லி மலர் பொறித்த வெள்ளை பிரஞ்சுக் கொடியும் மற்றொரு கையில் கூரிய வாளும் ஏந்தி அவள் அங்கும் இங்குமாகப் பாய்ந்து பாய்ந்து போரிட்டாள். "விடாதே! முன்னேறு! வெற்றி நமதே! அன்னை பிரான்சுக்காக! தாய் நாட்டிற்காக!" என்ற உணர்ச்சி வாக்கியங்களை அவள் வாய் வீறிட்டெழுப்பியது. அவளது வீரமுழக்கம் எங்கள் உள்ளத்தைத் தொட்டது. அவளது ஆவேசச் செய்கை எங்களை மெய் சிலிர்க்கச் செய்தது. நாங்கள் எங்களையே மறந்தோம். புலி எனப்பாய்ந்தோம்.

பற்றி எரிகின்ற கோட்டைகளை நாங்கள் பார்க்கவில்லை. கொட்டுகின்ற குருதியைக்கண்டு கலங்கவில்லை. இரத்த ஆறும், பிணக்காடும், துடிக்கும் மனித உருப்புக்களும் எங்கள் தாக்குதலை நிறுத்தவில்லை. நாங்கள் தொடர்ந்து போரிட்டோம். "ஜோனுக்காக; பிரஞ்சு நாட்டிற்காக" என்ற முழக்கத்துடன் ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்ட நாடுகள் ஒவ்வொன்றாக விடுவிக்கப்பட்டன. ஜோனின் எதிர்பாராத திடீர் தாக்குதல் அவர்களைத் திணறச் செய்தது. அவைகளிலே மிக முக்கியமானது "டோரல்ஸ்" வீழ்ச்சி.

ஆர்லின்ஸில் அவர்கள் ஆதிக்கத்தில் அகப்பட்டிருந்த பாலத்தின்மேலே எழுப்பப் பட்டிருந்தது கோட்டை டோரல்லஸ். அதைத் தாக்கினோம்; மகத்தான வெற்றியும் பெற்றோம்! இதுவே ஆர்லியன்ஸை நாங்கள் கைப்பற்ற நடத்திய பெரும் போராட்டமாகும். ஜோன் பெற்ற மறக்க முடியாத வீரவெற்றியுமாகும்!

டோரல்லஸ் பாலத்தை வீழ்த்துவது மிகவும் சிரமமாக இருந்தது. அவர்களோ கோட்டைக் குள்ளிருந்து தாக்கினார்கள். நாங்களோ வெளியில்! இடையே லோயர் பெரும் நதி. அதன் குறுக்கேதான் மாபெரும் பாலம். அதிலும் அவர்களை எப்படித்தாக்குவது? இவைகளெல்லாம் ஜோன் வருவதற்கு முன்னால் புரியாத புதிர். தெரியாத செய்திகள் நம்பிக்கையின் உயர்வும், வெற்றியின் பயனும் எப்படிப்பட்டவை என்பதை அப்போது தான் நன்றாகப் புரிந்து கொண்டோம். அதற்காக எங்கள் உயிரையும் பணயம் வைத்தோம். எதிரிகளின் தாக்குதலும் மிகவும் அதிகமாக இருந்தது. அப்போது பார்த்திருக்கவேண்டும், ஜோனின் திறமையை! நிமிடத்திற்கொரு ஆணை, வேளைக்கொரு போர் முறை—கட்டளைமேல் கட்டளை பிறப்பித்தபடியே இருந்தாள். போர்

தொடர்ந்தது. கையிலுள்ள தாய் நாட்டுக்கொடியை கோட்டையின் உச்சியிலே கொண்டு சென்று நாட்ட வேண்டுமென்பது அவளது எண்ணம். எனவே செத்து விழும் பிணத்தின் மீது ஏணியைப் போட்டு அதின் மேலேறியபடி, திருப்பித் திருப்பித் தாக்கவும் செய்தாள். திடீரென்று விரைந்து பறந்து வந்த அம்பை அவள் பார்க்க வில்லை. ஆங்கிலேயரின் அம்பு ஜோனின் தொண்டையில் தைத்தது. போர்க்களத்திலேயே அந்த வீரமகள் வீழ்ந்தாள். காயம் சற்றுக்கடுமையானதே. குருதி கொப்பளித்தது. உடனிருந்த நாங்கள் பதறிப்போனோம். ஆனால் கண்ணை மூடித்திறப்பதற்குள் காயத்தைச் சரிப்படுத்திக் கொண்டாள். கட்டு இட்டாள். மீண்டும் போருக்குத் தயாரானாள். என்னே ! அவளது வீரம்! தாய் நாட்டுப்பற்று! ஜோனின் இந்தத் துணிச்சலையும் வீரத்தையும் கண்ட நாங்கள் ஆச்சரியத்தால் கல்லாய்த்தான் நின்றோம். அவள் இட்ட கட்டளை எங்களை மீண்டும் உணர்வு பெறச்செய்தது. வெற்றிமேல் வெற்றி ஜோனை நாடி வந்துகொண்டே இருந்தது. ஆம்! அவளை வரவேற்க வெற்றிச்செல்வி அன்புக்கரம் நீட்டினாள். ஜார்க், பிகன்ஸி, மேங் முதலிய ஆங்கிலப் போர்த்தளங்கள் ஜோனின் படைவரிசைக்கு முன் நிற்க முடியவில்லை. தலை தாழ்த்தி—தண்டனிட்டனர். சர். ஜான் டால்பட் ஆங்கிலேயரின் இணையற்ற வீரன். அயர்லாந்து நாட்டின் கவர்னர் பதவியில் மூன்று முறை அமர்ந்தவர். பிரஞ்சுப் படையினரால், ஜோனின் தலைமையில், 'பாட்டே' என்னும் இடத்தில் முறியடிக்கப்பட்டுக் கைதியாக்கப்பட்டார்.

'ஆர்லியன்ஸ் கோட்டையிலே பிரஞ்சுக்கொடி பறக்க வேண்டும்' இதுவே அவளது இதய கீதமாக அமைந்தது. முன் விளைந்த மரணகாயத்தையும் பொருட் படுத்தாது

கொடியை நாட்டவேண்டுமென்று ஓடினுள் கோட்டையை நோக்கி. நாங்கள் விடாப்பிடியாகத் தாக்கினேம். ஆங்கிலேயரது பிடி சற்றுத்தளர்ந்தது. பாலம் எரிக்கப்பட்டது நாங்கள் டோரில்லஸ் உள்ளே நுழைந்தோம், ஆங்கிலேயப் போர்த்தளபதி சர் வில்லியம் கிளாஸ்டேல்—என்னும் சிறந்த படைவீரர் தன் துணைவர்களோடு எரிந்து சாம்பலாகி பாலத்தோடு பாலமாகக், கீழே வீழ்ந்தழிந்தான்.

வீரமங்கையின் கொடி வானைத்தொட்டது! ஆர்லியன்ஸ மீட்கப்பட்டது! புரட்சிப்பெண்—எங்கள் போர்த்தலைவி—வீரத்தாய்—ஜோன் அடிமைப்பட்டுக் கொண்டிருந்த பிரஞ்சு நாட்டின் மானத்தைக் காப்பாற்றினுள்.

பொங்கி வழிந்த மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய சார்லஸ் டாபின் ஜோன் ஆல்ரியன்ஸிலே பெற்ற மாபெரும் வெற்றிக்கு தன் பாராட்டுதலை வழங்கினர். ஜோன் இந்த வெற்றிகளில் மகிழ்ந்ததாகவோ—திருப்தியடைந்த தாகவோ காணப்படவில்லை. இவை அவள் உள்ளத்திற்கு பூரிப்பை ஊட்டவில்லை. ஆனல் அதைவிட முக்கியமான ஒன்றை எண்ணி அவள் திட்டமிட்டாள். பலவேளைகளில் நான் கேட்டிருக்கிறேன், "சார்லஸுக்கு முடி சூட்டி விட்டால் தான் என் கடமை நிறைவேறும்" என்ற வார்த்தைகளை ஜோனின் உதடுகள் அடிக்கடி வெளியிட்டதை. ஆகவே அவள் சார்லஸை ரீம்ஸுக்கு அழைத்து வந்து முடிசூட்ட முனைந்தாள். நான் ஜோனின் படையில், ஒரு வீரனுக அவளுடன் ஒளிவு மறைவின்றி பேசிப்பழகிப் பணியாற்றும் வாய்ப்புப்பெற்றவன். என் பெயர் ஜான் மெட்ஸ். வீரர்களாகிய நாங்கள் என்றென்றைக்கும் அவளை மறக்க மாட்டோம் மறக்கவும் முடியாது. ஜோன் ஒரு புரட்சிப்பெண் போர்க்களப்புலி-விடுதலைச்சுடர்-வீரத்தின் சின்னம் சிங்கத்தின் குகை நுழைந்து வாகை சூடிய வேங்கை.

# ஜோன்

சார்லஸுக்கு முடிசூட்டுவிழா! எனது இலட்சியம் நிறைவேறுகிறது. பர்கண்டி மாகாணத்தின் வழியாக பரிவாரங்களின் படைவரிசைகளோடு சார்லஸ் ரீம்ஸுக்கு வந்துவிட்டார். ஆக்ஸறி கீழ்ப்படிந்தது. 'டிராய்,' படையின் தோற்றத்தைக் கண்டே சிரம் தாழ்த்திற்று. ஜூலை 14-ம் நாள். அரசப்படை ரீம்ஸை அடைந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு தூய ரெமியின் ஆபட். புனிதத்தைலம் தடவி மதச்சடங்குகளை நிறைவேற்றினர். ஆர்ச்பிஷப் ரேனல்ட்-டி-சார்டிஸ் மன்னருக்கு மகுடம் சூட்டியபோது நான் மண்டியிட்டு வணங்கினேன்.

"பெருமைக்குரிய மன்னா! என் நீண்டநாள் கனவு நிறைவேறியது! ஆர்லியன்ஸைக் கைப்பற்றித் தங்களை ரீம்ஸுக்கு அழைத்து வந்தேன். மகுடம் புனைவித்து மகிழ்ந்தேன். இப்போது நீங்கள் தான் உண்மையான அரசர். இந்த பிரஞ்சு நாட்டுப் பேரரசு என்றென்றைக்கும் தங்களுடையதே!" என்று பொங்கி வரும் பூரிப்பை அடக்க முடியாமல் கூறினேன். எனது வாழ்க்கையிலே இதற்குமேல் எனக்கென்ன பெருமைதேவை! புகழ்மாளிகையின் உப்பரிகையில் நின்றேன். ஆதிக்கத்தைத் தகர்ப்பதும், ஆட்சி அமைப்பதும் ஒரு பெண்ணாலும் முடியும் என்ற கருத்தை பிரஞ்சு நாட்டிற்கும் அதன் மூலம் உலகிற்கும் உணரவைக்க என்னால் முடிந்ததை எண்ணிக்களிப்புற்றேன். அதற்காக நீள் துயிலிலே இருந்த அரசனைத் துயிலெழுப்ப பூபாலம் பாடினேன். விழிப்புணர்ச்சி உண்டாக்கினேன். முடிந்த அளவு தைரியம் ஊட்டினேன். இழந்த நம்பிக்கையை மீட்

டேன் ! மகுடம் சூட்டினேன். இத்தனைக்குப் பிறகு பொறுப்புள்ள மன்னனாக மாறியதற்குப் பிறகாவது திடவுள்ளமும் வைராக்கியமும் பெற்றவராகயிருப்பான் என்று நினைத்தேன். இனிமேல் சார்லஸுக்கு என்ன பயம் ? எதையும் துணிந்து செய்யலாம் அதிகார பூர்வமாக நாட்டு ஆட்சி தன் கையில் இருப்பதால், என்று எண்ணினேன். ஆனால் அவரோ ஊசலாடினார். கொள்கையற்றவரென்பதைக் காட்டிக்கொள்ள ஆரம்பித்தார்.

"உடனடியாகப் பாரிஸையும் எதிர்த்துப் படை நடத்துவோம்" என்று நான் பலமுறை கேட்டேன் "பர்கண்டி அரசரும் பிலிப்பினிடம் சமாதானம் செய்து கொண்டு அதன் மூலம் ஆங்கிலேயர்களுக் கெதிராக அவர்களைத் துணையாக்கிக் கொள்ள முடியும். அதுவே சிறந்த வழி" என்று நம்பிக்கையோடு கூறினர். கம்பீன், செனிலிஸ், பீவீஸ் அரசப் படைக்குக் கீழ்ப்படிந்தது. எனக்குத் துணைநின்றார் என்று பழி சுமத்தப்பட்டு பிஷப் பீட்டர்காக்கன் நாட்டை விட்டே துரத்தப்பட்டார். பிரஞ்சு நாட்டைப் பரிபூரண விடுதலை பூமியாக மாற்ற எனக்குப் படைவீரர்களை அனுப்பிவைக்கும் கடமையைச் சார்லஸ் புறக்கணித்தார். அதற்கு மாறாக "உனது மாகாணத்தை வரிச்சுமையிலிருந்து நீக்கிவிட்டேன். இனி நீங்கள் வரி கட்டத் தேவையில்லை,' என்று என்னைச் சமாதானப்படுத்தினர். அதன் மூலம் என் குடும்பத்தைக் கவுரவிப்பதாகக் கருதிக்கொண்டார் போலும். என் கவுரவமோ—என் குடும்ப கவுரவமோ அதுபற்றி எனக்கென்ன கவலை? அதுவா என் வாழ்க்கையின் குறிக்கோள்? அல்லவே! எனவே நான் வற்புறுத்தினேன் படை அனுப்பும்படி. அரசரும் ஆர்ச் பிஷப்பும் என்னைப் பயமுறுத்தினர்கள்.

"போராட்டத்தில் தீங்கு ஏற்பட்டால் நாங்கள் காப்பாற்ற முன் வரமாட்டோம். ஆங்கிலேயர்கள் உன்னைப் பழி தீர்க்கத் தேடுகின்றனர். உன்னைக் காட்டிக் கொடுப்பவருக்கு 16,000 பவுன் பரிசளிக்கப்படும் என்று வார்விக் பறைசாற்றியுள்ளான். எனவே நீ உன் கிராமத்திற்குச் சென்றுவிடு" என்று காரண முங் காட்டினர்.

நான் அஞ்சவில்லை 'கடவுள் என்னைக் காப்பாற்றுவார்' என்ற உறுதியோடு உத்திரவு கேட்டேன் மீண்டும். இறுதியிலே பாரிஸை எதிர்க்கும் உரிமையை மன்னனிடமிருந்து நான் பெற்றுக் கொண்டேன். ஆனால், என்ன சொல்வது, அது ஒரு மறக்க முடியாத பயங்கரத் தோல்வியாயிற்று; அதை நான் ஒப்புக் கொள்கிறேன். பர்கண்டியை எதிர்ப்பதில் சார்லஸுக்கு ஊக்கமில்லை, எனவே போதுமான படைவீரர்களை எனக் களிக்கவில்லை. இருந்தாலும் எனது தைரியம் குன்றவில்லை. படை நடத்திச் செல்லும் பொறுப்பிலிருந்து கொஞ்சங்கூடப் பின்வாங்கவில்லை. ஆனால் நானே ஒரு சிறு படையினது துணையுடனேயே போராட வேண்டியிருந்தது. அரை மன தோடு தான் அவர்களும் போரிட்டார்கள். நானும் காயப் படுத்தப் பட்டேன். போர் தொடர்ந்தது.

ஒரு நாள் திடீரென்று இந்த வெறிபிடித்த ஆங்கிலேயர் களும் பர்கண்டியர்களும் சேர்ந்து கம்பீன் மீது—நான் பற்றும் பாசமும் கொண்ட அந்த நல்ல பகுதியின் மேல்—போர் தொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களைக் காப்பாற்ற விரைந்து ஓடினேன். பட்டணத்திற்கு வெளியே எதிர்பாராத விதமாப் 'லக்ஸம்பர்க் ஜாண்' என்பவரால் நான் கைது செய்யப்பட்டேன். பழிவாங்கும் தீய எண்ணத்திலே வளர்ந்து விட்ட காக்கன் என்னை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிடும்படி அவர்களைத் தூண்டினான்.

உலக மக்களை உய்விக்க வந்த இயேசு 30 வெள்ளிக் காசுகளுக்காக உடனிருந்ததோழன் **யூதாஸ் காரியோத்தால்** காட்டிக் கொடுக்கப்பட்டார் அல்லவா? நாட்டு விடுதலைக்குப் போராடிய நானும் என் நாட்டவராலேயே 16,000 பவுன் களுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டேன். என் விலை 16,000 பவுன். என் உயிருக்கு எவ்வளவு மதிப்பு!

ஏற்கனவே காக்கன் நாட்டைவிட்டு வெளியேற்றப் பட்டவர். அந்த ஆத்திரத்தை வெளிக்காட்ட, குமுறும் உள் ளத்திற்கு அமைதி தேட அவர் கையாள முடிந்த ஒரே வழி அது தான் போலும்! காக்கனின் பண்பை நான் முற்றிலும் குறை கூற வில்லை. தொல்லையிலும், தாங்கமுடியாத துயரத் திலும் சிக்கியவர்கள் அதற்குக் காரணமாயிருந்தவர்களைப் பழி தீர்த்துக் கொள்ள முயல்வது மனித இயல்புதான். அவரது துயரத்திற்கு நான் காரணமாயிருந்தேன் என்று அவர் கருதிக் கொண்டார். உண்மையில் எனக்கும் அவரது நாடு கடத்தலுக் கும் தொடர்பேயில்லை. அவரை நாட்டை விட்டுத் துரத்து வதால் எனக்கென்ன பயன்? நான் எவ்வளவுதான் நேர்மை யாக நடந்தாலும் காக்கன் என்னைத் தவறுதலாகவே புரிந்து கொண்டு, அதே எண்ணத்திலேயே அவர் திருப்தியும் கொண்டு விட்டபின், அவர் நினைப்பை எப்படி மாற்றமுடியும்? ஆத்திரத்திற்கும் அவமானத்திற்கும் ஆளான ஆங்கிலேயர் களோ, என்னைப் பற்றி குழப்பத்திற்கிடமான பற்பல கருத் தைக் கொண்டிருந்தார்கள். என்னை சூன்யக்காரி — பிசாசு பிடித்தவள்—மதத்துவேஷி—இன்னும் எத்தனையோ பெயரிட் டழைத்தார்கள். பிரஞ்சு நாட்டு பிஷப்புக்களை உள்ளடக்கிய நீதி மன்றம் என்னை விசாரணை செய்து சூன்யக்காரி என்று தீர்ப்பளித்து விட்டால், எந்த மக்கள் என்னை நல்லவள்-நாட்டுப் பற்றுள்ளவள் என்று பாராட்டுகிறார்களோ அவர்களே என்னை

ஏளனத்திற்கும் கண்டனத்திற்கும் உரியவளாகப் பிரகடனப் படுத்துவார்கள் என்பதிலே அவர்களுக்கு நல்ல நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கைக்குக் கேடில்லாதபடி — அவர்களது எண்ணம் ஈடேறத்தான் செய்தது.

''நான் ஜோன் என்றழைக்கப்படும் பிரஞ்சுப் பெண். மனப்பூர்வமாகக் கீழ்க்காணும் மதச் சம்பிரதாயச் சட்டங்களைப் பாழாக்கக் காரணமாயிருந்த பாவி—கொடுமை செய்தவள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆண்டவனிடமிருந்து —தேவதூதர்கள் புனிதமானவர்களிடமிருந்தும் நேரடியாகக் கருத்துக்களைப் பெற்றேன் என்று சாதித்தேன். துணிகரமாக, பிசாசுகளிடமிருந்து நான் இக் கருத்துக்களைப் பெற்றேன் என்றுரைத்த தேவாலயத்தார்களின் கருத்துக்களை எதிர்த்தேன்—உதறித் தள்ளினேன். புனிதமான விவிலிய நூலுக்கு எதிராக—தேவாலயத்தின் சட்ட திட்டங்களுக்கு மாறாக—வெறுக்கத் தகுந்த முறையில் பெண்மைக் குணத்திற்கு ஒவ்வாத முறையில் ஆடை தரித்தேன். அதன் மூலம் கடவுள் நிந்தனை செய்தவளானேன். ஆடவனைப்போல் எனது தலைமயிரைக் கத்தரித்தேன். மோட்சத்திலே நான் பெண்ணாக இருந்து செய்ய வேண்டிய கடமைகளுக்கு எதிராக நடந்தேன். கரங்களிலே வாளேந்தினேன்! ரத்தம் சிந்தக் காரணமானேன்! ஒருவரை ஒருவர் கொலை செய்யத் தூண்டினேன். பைசாச உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டேன்! அதன் மூலம் ஏமாற்றினேன். துணிச்சலாக—மத நிந்தனைக்குரிய விதத்தில் விடாப்பிடியாக எனது கருத்துக்களுக்கு ஆண்டவனை உரியவனாக்கினேன். தூண்டி விடுதல்—விக்கிரக ஆராதனையைத் தடுத்தல்—கீழ்ப்படியாமை—மண்டைக் கர்வம்—மத அலட்சியம் என்ற பாவங்களுக்கு நான் காரணமானேன். அதை ஒத்துக் கொள்கிறேன். அந்தப் பாவங்களிலிருந்து நான்

விலகிக்கொள்ளவே விரும்புகிறேன். அவைகளிலிருந்து விலகுகிறேன். அந்த நல்ல நிலையை எனக்கேற்படுத்திக் கொடுத்த சட்டத் தலைவர்களே! — மகான்களே! உங்களுக்கு நான் நன்றியறிதலுள்ளவளாக இருப்பேன். இனிமேல் என்றென்றைக்கும் பரிசுத்த தேவாலயத்தின் போக்கிற்கு நான் கட்டுப்படுவேன். என்றும் இந்தத் தவறுதல்களுக்கு மறுபடியும் நான் ஆளாகமாட்டேன். பரிசுத்தத் தந்தையாம் போப்பாண்டவருக்கு நான் என்றும் கீழ்ப்படிதலுள்ளவளா யிருப்பேன்—ஆண்டவர் சாட்சியாக—பரிசுத்த சுவிசேஷமே சாட்சியாக நான் இதை ஒத்துக் கொள்கிறேன். இந்தக் குற்றத்தைத் திருப்பி பெறும் பத்திரத்திற்கு எனது ஒப்புதல்—கையெழுத்திடுகிறேன்"

மேலே காணும் அந்தக் குற்றத்தைத் திருப்பிப் பெறும் பத்திரத்தில் நான் கையெழுத்திட வேண்டுமென்று என்னை வற்புறுத்தினார்கள். நான் மதநிந்தனை புரிந்தவள் என்று, துணிந்து மத குருக்களும்—பாதிரிமார்களும்—டாமினிக்கன் கோயில் மதவிற்பன்னர்களும், அடங்கிய குழு கூறிற்று அதற்குத் தனி நீதி மன்றமே அமைந்தது. தேவாலய அதிகாரிகளை உள்ளடக்கிய அந்த விசாரணை மன்றத்திலே ஒரு பக்கத்தில் போடப்பட்டிருந்த கரடுமுரடான நாற்காலியிலே—நான் கைதியல்லவா — உட்காரப் பணிக்கப்பட்டேன். நான் அரசியல் கைதியல்ல—அந்த அடிப்படையில் சாட்டப் பட்ட குற்றங்களுக்காக என்னை விசாரணை செய்யவில்லை. நீதி மன்றத்தின் இரு மருங்கிலும் போடப்பட்டிருந்த உயர்ந்த ஆசனங்களிலே வீற்றிருந்த பிஷப்பும் மத விசாரணைக்காரரும் என்னை மதத்துவேஷி என்று குற்றஞ் சாட்டினர். பயங்கரமான அவர்களின் சுட்டு விரல்கள் என்னை, அடங்காப்பிடாரி—ஆலயங்களையும் ஆசாரங்களையும் அவமதித்தவள், நாசக்காரி—

பாசாங்கு செய்பவள் என்று சுட்டிக்காட்டின. குழுமியிருந்தவர்களிலே சிலர் பிரித்தானிய. நாட்டு மண்ணிலே தவழ்ந்தவர்கள் குறிப்பாக வார்விக்—அரசர்களை உருவாக்குவோன், எனது உயிருக்கு 16,000 பவுன் விலை மதிப்பளித்த பூமான் ஜாண்—டி—ஸ்டோகம்பர்—ஆங்கில நாட்டுப் பாதிரி ஆகிய இருவரும் எவ்வளவு துடித்தார்கள் தெரியுமா? அவர்கள் கண்கள் கனலைக் கக்கின! என்னை எரித்து விடுவதிலே அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம்! எத்தனையோ முறை மன்றத்திலேயே குமுறிக் குதித்தார்கள்.

என்னை விசாரித்த பிஷப் காக்கன் பேச்சு அவர்களின் உள்ளத்தை ஒரு வேளை புண்படுத்தவே செய்தது. வழக்கமாகப் பேசும் சாதுரியத்தையும்—கனிவுமொழியையும் உதறித் தள்ளிவிட்டுக் கடுகடுப்பான தோற்றத்தை வரவழைத்துக் கொண்டு அழுத்தம் திருத்தமான குரலில் அவர் பேச ஆரம்பித்தார். "மத நிந்தனை" சாதாரணமான விஷயமல்ல! என்று தொடங்கிய அவர்—"அந்த நிந்தனை மிகக் குறைந்த அளவினதாக இருந்தாலும்கூட கண்டனத்திற்குரியதே" என்று பீடிகை போட்டார். நான் அவரது பேச்சைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தேன்.

"மதத்துவேஷிகள் யார்?" என்று வலியுறுத்த வந்த அந்த ஆய்வுக்காரர் அற்புதமான கருத்தொன்றை அந்த நீதி மன்றத்திலே வெளியிட்டார். அந்தக் கருத்துரை ஆங்கில அதிகாரிகளின் உள்ளத்தை நறுக்கென்று குத்தியது போலும்! அவர்கள் ஓ! வென்று அலறிவிட்டார்கள்.

"ஏசு நாதரின் கட்டளையை ஏற்று அதன் அறிகுறியாகத் தன் சொத்து சுகங்கள் அனைத்தையும் துறந்து வறுமைக் கோலம் பூண்டு—தர்மசிந்தனை—தயாளகுணம்—உயர் பண்பு—நல்லொழுக்கம் என்னும் சிறந்த குணங்களின் நாயகர்களாக

மாறும் எந்தத் தூய்மையுள்ளம் படைத்த ஆணும் பெண்ணும் மத நிந்தனையின் அடிப்படைக் கர்த்தாக்களாக மாறுகிறார்கள்.''

காக்கன் கூறிய இந்த வார்த்தைகள் அந்த அதிகாரிகளின் உள்ளத்தை மகிழ்ச்சி மன்றத்திற்கு அழைத்துவரும் என்று கருதுகிறீர்கள்? ஆண்டவன் விரும்பிய முறையிலே வாழ்க்கை நடத்தாமல், இன்பக் கேளிக்கையிலே தன்னை உருட்டிவிடும் மதக்குருக்களின் செய்கைகள் எப்படி நல் வாழ்வு—தொண்டாற்றும் வாழ்வு—அதுவும் பிறர்குரியவர்க ளாக வாழ விரும்புபவர்களின் உள்ளங்களை வாட்டாமலிருக்க முடியும்? எனவே இந்த அடிப்படையில் விசாரணை நடத்தி அவர் எனக்காக கேட்டுக் கொண்ட வேண்டுகோள்—இரக்கம், இரக்கம் என்பதுதான். என்னைத்தீக்கிரையாக்கத் துடிக்கும் அனல்விடும் இரும்பு இதயங்களிலே அந்த வார்த்தைகள் நீர்த் திவலைகளாக விழுந்தன! ஆண்டவனின் குழந்தைகள் நாம். செய்த குற்றங்களை உணர்ந்து தவறிழைத்தவர்கள் மன்னிப் பைக் கோறும்போது மன்னிப்பதும் - மன்னித்து மறுபடியும் நல்வாழ்வு வாழச் சந்தர்ப்பம் அளிப்பதும் மதச்சட்டங்களின் அடிப்படை நியதியாயிற்றே! இந்த அடிப்படை நியாயத்தைத் தகர்த் தெறிந்து விட்டுத் தங்களுக்கு ஏற்பட்ட மனக் கொதிப் பிற்கு அமைதி தேடுவதுதான் அவர்களுக்கு முக்கியமாகி விட் டது. அந்த அமைதி அவர்களால் 'தவறிழைத்தவள்' என்று குற்றஞ் சாட்டப்பட்ட என்னைத் தீக்கிரையாக்குவதிலே தான் அமைந்திருக்கிறது என்று கருதிக்கொண்டார்கள்!

அப்பப்பா! எத்தனை வசவுகள்! எத்தனை குற்றச்சாட்டு கள்! இவ்வளவும் டொமினிகன் மதத்தலைவர்கள், வின்செஸ்டர் மதகுரு சாப்லேன் - டி - ஸ்டோம்பர், பாரிஸ் மதகுரு மாஸ் டர் - டி - கோர்சிலஸ் போன்ற தூய உள்ளம் படைத்த பாதிரி மார்களாலேயே வழங்கப்பட்டன.

மதத்துவேஷி, தேவாலயத்தின் எதிரி! ஒப்புக் கொள்ளப் பட்ட மதக்கோட்பாடுகளைக் கேள்வி கேட்கத்துணிந்து விட்ட தறுதலை! போப்பாண்டவரையே மதிக்காத பைசாசு! ஆண்ட வனோடு பேசுகிறேன் என்று பொய் பேசிய பாபி! மாயக்காரி யாரும் பேச முடியாததை, பேசக்கூடாததை - செய்யாததை செய்ய முடியாததை செய்தவள். படிப்பற்ற ஒரு கிராமப் பெண் என்றாலும் என்ன அகம்பாவம் அவளுக்கு! ஆண்ட வனுக்கும் தனக்குமிடையே தரகர்கள் தேவையில்லை என் னுரைக்குமளவுக்கு நாவடக்கமற்ற நாசக்காரி! பொல்லாங்கு காரி பாகவல்லவா இருக்கிறாள்! என்றெல்லாம் நிந்தனைகளை அர்ச்சித்தார்கள் அந்தப் பாதிரிமார்கள்.

ஆண்டவன் கட்டளைகளை மக்கள் சமுதாயதிற்குத் தெரி விக்கும் தகுதியுடையதாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரே நிலை யம் தேவாலயம் - அந்த நிலையத்தின் தலைவர்களான மதகுருக் களுக்குத்தானே மதக்கருத்துக்களைப் பேசவோ - ஆண்டவன் அவர்களுக்கிடும் கட்டளையை நிறைவேற்றவோ உரிமை உண்டு! அந்த உரிமையை எள்ளி நகையாடுகிறாளே, இந்த நச்சு எண்ணங்கொண்ட நயவஞ்சகி. இந்த ஆண்டவன் இந்த பாபாத்மாவிடமா பேசுவார்? இது ஆண்டவனுக்கே பொருக்காதே! என்று ஆத்திரத்தோடு ஆர்ப்பரித்தார் சாப்லேன்.

கைதி கூண்டிலே நின்று கொண்டிருந்த என்னிடம் கையொப்பமிட நீட்டினார்கள், மேலே கூறிய குற்றங்களை ஒப் புக்கொண்டு மன்னிப்புக் கேட்கும் பத்திரத்தை.

என் உடல் நடுங்கியது! நான் என்நிலை இழந்தேன் சிறிது நேரம். என்மீதா இந்தக் குற்றச் சாட்டுகள்! நான் செய்த தவறு களை - இல்லை-இல்லை! நான் இழைத்த பாவங்களை கொடுமை களை உங்களுக்கு ஏற்கனவே பேசிற்று அந்தப்பத்திரம்.

அதிலே கூறப்பட்டிருக்கும் கருத்துக்களைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? நான் ஆண்டவனிடமிருந்து நேரடியாக கட்டளை பெற்றேன் என்று கூறியது - மதநிந்தனையாம்! அதற்கு அவர்கள் கொண்டபொருள் நான் தேவாலயத்தின் தனிஉரிமையை - கடவுட்தன்மையை உதாசீனம் செய்தேனும்! எந்த முறையில் இந்த வாதம் நியாயமாகும்?

நான் ஆலயங்களைக் குறை கூறியதில்லை. மதவாதிகளை எந்த நேரத்திலும் பரிகசித்ததில்லை. அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் - தங்களுக்குத்தான் ஆண்டவனிடம் நேரடியாக பேசும் உரிமை உண்டு என்ற கோட்பாடுகள் தவறானது என்று ஒரு வார்த்தை கூடக் கூறியதில்லை. ஆண்டவனைப் பற்றிப் பேசுவதற்குரிய தகுதி இந்தப் போப்பாண்டவருக்கு இல்லை என்றுநான் தவறியும் நினைத்தது மில்லை. ஆனால் ஆண்டவன் பெயராலேயே அவர்கள் நடத்தும் முறையற்ற வாழ்வு - குற்றமானவை என்று ஆண்டவனாலேயே குறிக்கப்பட்ட ஒழுக்க மற்ற வாழ்வு முறை என் கண்களை உறுத்தாமலில்லை. ஆனால் அவற்றை வெளிப்படுத்த நான் ஒரு காலமும் முயன்றதில்லை, மதகுருக்கள் தாங்கள் நடத்தும் போலிவாழ்வை மறைத்துவிட அறியாமை என்னும் திரையாலே கட்டப்பட்ட மக்களின் கண்கள் நிரந்தரமாகத் திறக்கப்படாமலிருக்கும் படியாக முயற்சிக்கிறார்கள் என்றுகூட நான் கூறவில்லை. கூற எண்ணியதும் இல்லை. ஆனால் எனக்குப்பட்ட கருத்தை - அதைத் தெரிவிக்கும் உரிமையை - ஆண்டவன் எனக்களித்திருக்கிறான். எனக்கு மட்டுமல்ல, உலகமக்களனைவருக்கும். அளிக்கப்பட்டுள்ள அந்த உரிமையைத் தேவாலயம் - அதன் குருமார்கள் தம் காலடியிலே பலியிட என்னைக் கேட்பதும் - மதவாதிகள் என்னைத் தொல்லைப்படுத்துவதும் - அச்சுறுத்துவதும் - ஆண்டவன் விருப்பத்திற்கு மாறானவைகளே என்ற

கருத்தை நான் திடமாகக் கொண்டிருந்தேன் என் உள்ளத்தில் ஊறிய அந்தக் கொள்கையிலே திளைத்து விட்டவளாக இருந்தேன்.

நான் கல்லாதவள்தான். பள்ளியிலே கற்றதில்லை - பெரும் பெரும் நூல்களின் அறிவுக் கருத்துக்களை நான் சுவைத்ததில்லை. அதனுலேயே நான் பேசுவதற்கு தகுதி யற்றவள் என்று என்னை ஆலய அதிபர்கள் தீர்மானித்து விட முடியாதே! என்னை அறிவற்றவள் என்று திட்டினுர்கள்! மறுக்க வில்லை! கல்வி கேள்வியற்ற கபோதி என்றுர்கள். எதற்காக நான் மறுக்க வேண்டும்? அந்த காரணத்தாலேயே நான் உணர்ந்து பார்க்கும் திறமையில்லாதவள் என்ற முடிவிற்கு விரைவது அறிவுடைமையாகாதே! கருத்தை உருவாக்குவதும், உருவாகிற கருத்தைத் தன் உரிமையாகக் கொள்வதும் அதை உரிமையோடு உரத்தக் குரலிலே வெளியிடுவதும் சமுதாயத் திற்கோ - ஆண்டவனுக்கோ - அடுக்காது என்று எப்படி வாதிக்க முடியும்? எனக்கென்று ஒரு சில கொள்கைகள் இருந்தன. அந்தக் கருத்துக்கள் ஆண்டவனின் சக்தியை ஆதரித்து தழுவி நின்றன! உண்மையான உயர்ந்த மதக் கோட் பாடுகளின் உள்ளொளியைப் பிரதி பலித்தன! சித்தி பெற்ற ஏசு பெருமானின் பேராட்சியின் கட்டளைக்குக் (Church Triumphant) கீழ் படிந்தேன். தூய காத்தரின். மார்க்கரெட், மைக்கேல் போன்ற பரிசுத்த ஆத்மாக்களின் ஆதரவுகளையும் எய்தினேன். அவர்களது நிலையை அடையப் போராடும் தேவாலய மதக் குருக்களின் (Church Militant) உத்தரவை நான் எதிர்பார்க்கவில்லை. ஆண்டவனின் மேல் எனக்கிருந்த பற்று - முழுநம்பிக்கை, நான் கொண்டிருந்த இலட்சியத்துக்கு - நாட்டு விடுதலைப் பணிக்கு உரமளித்தது. எதற்காக நான் ஆண்டவனுக்கும் — மக்களுக்கும்

இடையே இருக்கும், மதத் தலைவர்களை நாடவேண்டும்? அதுவும் அரசின் உரிமைக்கு, நாட்டு விடுதலைக்கு, தாயக மீட்சிக்கு. எனவே நான் அவ்வாறு சொன்னேன்—சொல்லியபடியும் நடந்து கொண்டேன். அந்தக் காரணங்களுக்காக என்னை விசாரணை செய்ய ஏற்பட்ட குழு சாட்டிய குற்றங்கள் எவ்வளவு கேலிக் குரியவை—பயங்கரமானவை!

நான் ஆடவர்களைப் போல் உடை தரித்துக் கொண்டேனும். பயங்கரமான குற்றச் சாட்டுகளிலே இதுவும் ஒன்று. இது மதக் கொள்கைக்கு மாறுபட்டதாம். அது மட்டுமா? தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டேன். அதுவும் ஒரு குற்றச் சாட்டு! நான் தலை நிமிர்ந்து ஒழுக்கமின்றி-- நாணமற்றவள் போல் நடந்தேனும்! இதோடு விட்டார்களா? வாளேந்தியது தவிர்க்க முடியாத குற்றமாம்! போரிட்டேனும்! குருதி கொட்டக் காரணமாக இருந்தேனும்! அதுமட்டு மல்லவே—குதிரைத் திருடினேனும்—குதித்துக் கூத்தாடி கும்மாளம் போட்டேனும் தேவதருக்களைச் சுற்றி! கூடாத, செய்யத் தகாத இந்தக் காரியங்களை நான் செய்தேனும். கடைசியாக அவர்களால் பொறுக்க முடியாத அளவிற்கு நான் இழைத்த குற்றம் மன்னிக்கமுடியாத குற்றம்—நான் தண்டனை அடைய வேண்டிய குற்றம்—ஆண்டவனிட மிருந்தே நான் கட்டளைப் பெற்றேன் என்று கூறியதாகும். இப்படிப்பட்ட குற்றங்கள் எவ்வளவோ சாட்டமுடியும்! சாட்டினர்கள். ஒன்றுஇரண்டல்ல. எட்டு பத்துமல்ல— அறுபத்து நான்கு குற்றச்சாட்டுகள். இங்கே குறிப்பிட்ட அத்தனைக் குற்றங்களும்— நான் நிறைவேற்றிய அருஞ் செயல்களை நன்ருகப் படம் பிடித்துக் காட்டுபவைகளே. ஆனல் அவை எப்படிக் குற்றமானதாகும்? என் செய்கையை முற்றிலும் அறிந்த நீங்களே சொல்லுங்கள், இவை குற்றமா என்று. விசாரணை மன்றத்திலே களிலும் கை

கால்களிலும் இரும்புச் சங்கிலியால் இருகப் பிணைத்து கைதிக் கூண்டிலே நிறுத்தி விட்டுக் குற்றம் சாட்டுகிறார்கள், நான் செய்த மகத்தான தியாகத்தை மறந்து விட்டு,

குற்றவாளியாகக் கைது செய்யப்பட்ட நான் ரூவனுக்கு விசேட விசாரணைக்கு அழைத்து வரப்பட்டு ஆண்டு ஒன்று ஆகிவிட்டது. நான் கைதானதற்கும் அவர்கள் தீர்ப்பளிப்பதற்கும் இடையே இருந்த ஓராண்டு காலத்தில் நாற்பது மத விற்பன்னர்கள் முன்னிலையில் பிஷப் பீட்டர் காக்கன் தலைமையில் நான் பட்டபாடு சொல்லுந்தரத்ததன்று. எவ்வளவு வேதனைதரும் கேள்விகளைக் கேட்டார்கள் தெரியுமா? அந்த "நன்றியறிதலுள்ள வீரர்கள்"! சிறுபிள்ளைத்தனமான—மூடக் கேள்விகள் கூட அல்ல வஞ்சகமான கேள்விகள் வாடிக்கையாக வீசப்பட்டன. அறுபத்து நான்கு குற்றச்சாட்டுகள் பன்னிரண்டு குற்றச்சாட்டுகளாகக் குறைக்கப்பட்டன. நான் ஏற்கனவே சொல்லியதைப்போல் அந்தக் குற்றச்சாட்டுகளிலே "நான் ஆண்டவனிடமிருந்து நேரடியாகக் கட்டளைகளைப் பெற்றேன்" என்பது முதல் இடம் பெற்றது. மற்றவைகளையுந்தான் உங்களுக்குத் தெரிவித்துவிட்டேனே! அந்த விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள் தவறு என்று சுட்டிக்காட்டிய நீதிபதி நாடுகடத்தப்பட்டார். 'தீர்ப்பை எதிர்த்து போப்பிடம் மனுச் செய்துகொள்ள உரிமையளியுங்கள்' என்ற என் வேண்டுகோளை மறுத்து உதாசீனம் செய்தனர். மன்றத்திலே என்னிடம் கேட்கப்பட்ட கேள்விகள் சிரிப்பையும் ஆத்திரத்தையும் மூட்டிவிட்டன. இதற்குள் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்களே—நான் வாசித்துக் காட்டிய மன்னிப்புப் பெறும் பத்திரத்தை. அந்தப் பத்திரத்திலே கையெழுத்திடும்படிக் கூறினார்கள். நான் தீயினால் எரிக்கப்படுவதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி அதுதான் என்றார்கள்.

விசாரணை செய்து—நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு—அந்தப் பத்திரத்திலே என் கையொப்பமிட்ட பிறகுதான் விடுதலை என்ற எண்ணம், என் உள்ளத்தில் உருவாகும் முறையிலே பேசினர்கள். நான் இறப்பதாயினும் உடனடியாக மடிந்து விடக் கூடாது என்று விரும்பினேன். என் பணி இன்னும் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று ஆசைப்பட்டேன். பாரிஸின் தெருவீதிகளிலே இன்னும் ஆங்கில நாட்டு ஆதிபத்திய விலங்குகள் உலவிக்கொண்டுதான் இருந்தன. பிரஞ்சு மண்ணிலே சிந்தப்பட்ட பிரன்சு வீரர்களின் செங்குருதி—அதற்கு நாம் அளிக்கும் மரியாதை ஆங்கிலேயர்களை விரட்டுவதிலேதான் இருக்கிறது என்று நான் கருதினேன். நான் அப்பொழுதே உடனடியாக எரிக்கப்பட்டால்? கொள்கையற்று ஊசலாடிக் கொண்டிருக்கும் பிரஞ்சு மன்னனையோ அடிக்கடி மாறிவிடும் மனப்போக்குடைய பிரஞ்சு வீரர்களையோ மட்டும் நம்பினல்—வீழ்ச்சி நோக்கி விரைந்து கொண்டிருக்கும் நாட்டை தடுப்பது யார்? நான் வாழத்தான் வேண்டும். எனவே நான் கையொப்பமிடத் தயாரானேன்.

எனக்கு என் பெயரை எழுதக்கூடத் தெரியாதே! எனவே எதிர்பார்த்தேன் யாராவது உதவிசெய்ய முன்வருவார்களா என்று. மார்ட்டின் லாட்வெனு என்னும் மதகுரு பரபரப்போடு விரைந்து வந்து—நான் அவர்களை ஏமாற்றி விடுவேன் என்று நினைத்தாரோ என்னவோ—அந்தப் பத்திரத்தை ஓர் புத்தகத்தின் மேல் வைத்து, என் கையைப் பிடித்து நகர்த்தி என் பெயரை 'ஜோன்' என எழுதவைத்தார். பிற்கு என்னாலே ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் குறியை வேறு இடும்படிக் கட்டளையிட்டார். நான் எற்றுக்கொண்டு அவ்வாறே செய்தேன். என் உள்ளம் மகிழ்ந்தது! கடமை உணர்ச்சியால்—நாட்டுவிடுதலை வேட்கையால் —தாயக மீட்சி ஆர்வத்தால் உந்தப்பட்ட நான்

வாழவேண்டிய அவசியத்தை உணர்ந்தேன்—கையொப்ப மிட்டேன்.

விடுதலை பெற்று வீடு திரும்பவேண்டியவள் தானே நான். என்ன ஆச்சரியம் பாருங்கள்! கையொப்பமிட்ட ஒப் பந்தப் பத்திரத்தை கரத்திலே வாங்கிக் கொண்டு அந்த மத விசாரணைக்காரர் நன்றி நவின்றுவிட்டு - நான் வாழ்க்கை முழு வதும் சிறையிலே கிடந்து 'கவலை' யெனும் ரொட்டித்துண்டை உண்டு 'துயரம்' எனும் நீரைப்பருகி மாண்டு மடியவேண்டு மென்று கட்டளையிட்டார்.

நான் திடுக்கிட்டேன். உள்ளம் கொதித்தது. ஆத்திரம் பொங்கி எழுந்தது. குற்றத்தை ஒப்புக்கொண்டேன். கையெழுத்துக் கேட்டார்கள்—போட்டுவிட்டேன்! விடுதலை தரவேண்டியது தானே! பிறகு எப்படி நான் தண்டிக்கப் படலாம்? எவ்வளவோ விட்டுக் கொடுத்தேன். என்னைக் கேலி செய்யுமளவிற்கு, என் கொள்கைகளைக் கூடத் தளர்த் திக் கொண்டேன். இவ்வளவிற்கும் பிறகும் நான் விடுதலை யை எதிர்பார்க்க முடியவில்லை. நான் நடுங்கினேன் மத விசாரணைக்காரரின் முடிவைக்கண்டு. நடுக்கம்—வேறு வழி அற்ற காரணத்தால் ஆத்திரத்தைக் கிளறி விட்டது. நான் கூச்சலிட்டேன்! ஏதேதோ பேசினேன்.

"ரொட்டியையும் தண்ணீரையும் கண்டு நான் அஞ்ச வில்லை. அவை எனக்குப் புதியவையுமல்ல—தேவை யானவையுமல்ல. ஆனால் இறுதியாக நான் எதிர்பார்த்ததற்கு மாறாக ஏமாற்றப்பட்டேன். சாவுக்கு நான் அஞ்சியவள் அல்ல. ஆனால் வாழவிரும்பினேன்!—எதற்காக? என் தாய் நாட்டிற்காக! வீழ்ச்சியுற்ற பிரன்சு நாட்டைக்காப்பாற்றினேன் ஆங்கில வெறியர்களை நாட்டைவிட்டு விரட்டினேன்! மகுட

மின்றி திரிந்த மன்னனுக்கு மணிமுடி சூட்டினேன். என் ஆண்டவன் எனக்களித்த கட்டளையை நிறைவேற்றினேன்! அதற்கா இந்தக் கொடுந்தண்டனை? ரொட்டி எனக்குக் கவலையைத் தராது—தண்ணீர் எனக்குத் துயரம் உண்டாக் காது. வானம்பாடியாகத் திரியும் என்னைக் கூண்டுக் கிளியாகச் சிறையிலே தள்ளுவது உங்களது வஞ்சகத்தைக் கண்டு, ஆண்டவனையே வெறுக்க நேர்ந்துள்ள நான் மறுபடியும் தெய்வநம்பிக்கை கொள்ளாதபடி அல்லும்பகலும் இருண்ட வாழ்வு வாழச்செய்யும் முயற்சியேயல்லவா? இந்த தண்டனை யை நான் ஏற்கத்தயாராக இல்லை. என்னை உங்கள் விருப்பம் போல் தீயிலிட்டுக் கொளுத்துங்கள்" என்று ஆர்பரித்தேன்.

ஆம்! நான் பிசாசு பிடித்தவள் என்றுதானே சொல்லுகிறீர்கள். அதை நிரூபிக்க முற்பட்டேன். காக்கனின் மேஜையின் மேலே வைத்திருந்த அந்தப் பத்திரத்தைத் தாவி எடுத்துத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தேன். என்னை உயிரோடு கொளுத்தட்டும் கவலையில்லை. என்றைக்கேனும் ஒரு நாள் என் நாடு என்னைப் புரிந்துகொள்ளும். என் நாட்டு மக்கள் உண்மையை உணர்ந்து கொள்ளத்தான் போகிறார்கள். தீயில் எரித்து வேடிக்கை பார்க்க விரும்புகிறவர்கள் தற் காலிகமாகப் பெற விரும்பும் மனச்சாந்தியை நான் தடுக்க வில்லை. என் நாட்டைச் சார்ந்தவர்களே இதற்கு ஆதரவு தரும்போது வெறி பிடித்த ஆங்கிலேயரிடமிருந்து எதை நான் எதிர்பார்க்க முடியும்? எந்த நாட்டின் வாழ்வுக்காக அன்று நான் என் உயிரைத் துச்சமென மதித்தேனோ, அந்த நாடே இன்று எனக்குச் சாவுமணி அடிக்கிறது. என்னே இவ்வுலகம்!

எனது துணிச்சலான பேச்சு விசாரணைக் குழுவினரை அபசாரம்! அபசாரம்! என்று அலறவைத்தது. எனது ஆவேசப் பேச்சு அவர்களைக் கோபத்தில் ஆழ்த்தியது.

"இவளைப் பொசுக்கத்தான் வேண்டும். பன்முறை மதத் துரோகம் செய்தவள்! மாயக்காரி!—" என்று சாப்ளின் ஸ்டோம்பர் கர்ஜித்தார்.

"தீ தயாராகட்டும்! இழுத்துச் செல்லுங்கள் இந்த நாசக் கார நயவஞ்சகியை" என்று மரண தண்டனை நிறைவேற்று வோரிடம் கட்டளை பிறப்பித்தார் வேறொரு "உத்தம சீலர்"

பாவம்! அந்த காக்கன் என் உயிரைக் காப் பாற்ற எவ்வளவோ முயற்சித்தார். வாழ்க்கை முழுவ தும் சிறைத்தண்டனை அனுபவித்து அதன் மூலம் என்னை எரிப்பதினின்றும் தப்பவைக்கவேண்டும் என்பது அவரது ஆசை! அவரது நல்லெண்ணத்தை நான் மதிக்கி றேன். ஆனால் அந்த எண்ணம் எனது மனச்சாட் சியை காலாலே எற்றி மிதித்தது! அதோ அந்தச் சந்தை வெளி! வானமண்டலம் புகைமண்டலபாகக் காட்சி தருகிறது என் உள்ளத்தில். வெளியே உள்ள ஆரவாரத்தை நான் தெளிவாகக்கேட்க முடிகிறது! அங்கே கொழுந்து விட்டெரியும் தீ தனது சிவப்பேறிய நாவால் என் உடலைச் சுவைக்கக்காத்திருக்கிறது! ஆங்கிலேயரின் கொடுமையான ஆத்திரப்பசிக்கு நான் நல்லுணவாகப் பயன்படுத்தப் பட்டேன்.

"நீ ஒரு மதத்துவேஷி என நான் தீர்ப்பளிக்கின்றேன்" என்று காக்கன் பிரகடனப் படுத்தினர்.

"நீ தீயினல் எரிக்கப்பட வேண்டும்" என்று மத விசாரணைக்காரர் மாற்ற இயலாத இறுதித்தீர்ப்பை அளித்தார். வழக்கப்படி நான் என் பகைவர்களாகிய ஆங்கிலேயர்களி டம் வார்விக் பிரபுவினது வீரர்களிடம் ஒப்படைக்கப்பட் டேன். தங்கள் கடமை தீர்ந்தது என்று கையைக்கழுவினர் மதகுருமார்கள். அவர்களுக்குத்தான் எவ்வளவு ஆனந்தம்!

என்ன வெற்றிக்குதூகலம்! இதோ! என்னைத்தீயிலிடுவதற்காக அழைத்துச் செல்கிறார்கள். நான் அதுகாறும் நம்பி இருந்தவர்களிலே பலப்பலரைச் 'சாவு' என்னை அணுக்கு முன் வழியிலே பார்த்தேன். என்னைத் தெரிந்தவர்களாகவே அவர்கள் காட்டிக்கொள்ள வில்லை. நான் முடிதரித்த சார்லஸ் மன்னன் - தனது சுட்டு விரலைக்கூட எனக்காக அசைக்க வில்லை. அதற்காக நான் கவலைப்படவில்லை. ஆனால் நேர்மையுள்ளம் படைத்தவர்களுக் கெல்லாம் நேரும் கதி இது தானா! என்று நினைக்கும் போது, ஐயோ! என் இதயம் சுக்கு நூறாகச் சிதறுகிறது! எனக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடக்கூட ஒரு வரும் இல்லை. அவர்கள் ஏன் எனக்காக வருந்தவேண்டும்? நான் ஏன் அவர்கள் இரக்கங் காட்டாததற்காகத் துயரமுறுகிறேன்? கடமையைச் செய்தேன் அதிலே வெற்றியும் பெற்றேன். பரிசு, அதோ சந்தை வெளியிலே நிறுத்தப்பட்டிருக்கும் கம்பம்! நல்லது எனது பரிதாபமான கதையை ஏன் எரிக்கப்படுகிறேன் என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டேன். இது நியாயந்தானா? நீங்களே தீர்ப்பளியுங்கள். இதோ கம்பத்திலே சேர்த்து என்னைக் கட்டி விட்டார்கள். சுமை சுமையாக விறகுகளும் சுள்ளிக் குச்சிகளும் அடுக்கப்பட்டு விட்டன. உற்றார் பெற்றோர், உறவினர் முன்னிலையில், உயிருடன் தீயும் வைத்துவிட்டார்கள். சிதையிலே மூளுகின்ற தீ என் உடலைப்பதம் பார்க்க ஆரம்பித்து விட்டது. என் நாட்டை விட்டு—எனது மக்களை விட்டு, ஏன் உலகத்தையே விட்டு நான் பிரிகிறேன்! நான் ஆண்டவன் உலகைச் சேர்கிறேன். ஆம் இதோ! என் காணிக்கை! பிரன்சு நாட்டுக்கு கடைசி என் சொட்டுக்கண்ணீர்! ஆ!......ஆண்டவரே......ஆ!

## பிஷப் காக்கன்

ஜோனின் விசாரணையின்போது தலைமை வகிக்கும், பொறுப்பைத் தாங்கியவன் நான். நான் எதிர் காலத்திலே மக்களால் எப்படி அழைக்கப்படுவேனோ எனக்குத் தெரியாது! என்னைப் பொறுத்தவரை நான் தவறிழைத்தவனல்ல. ஜோனைத் தீயிட்டுப் பொசுக்கத்துடியாயத் துடித்த ஆங்கிலேயர்களுக்கு நான் துணைபோகவில்லை. மாறாக அவளது உயிரைக்காப் பாற்ற நான் முயற்சி எடுத்துக்கொண்டேன். ஜோன் ஏற் கனவே ஆங்கிலேயர்களாலேயே விலைக்கு வாங்கப்பட்டவள். மன்றத்திலே விசாரணையின் போது நான் அவளுக்காகப் பரிந்து பேசுகிறேன் என்று கூட என்னை வார்விக்கும் அவ னது நண்பர்களும் குறை கூறினார்கள். நான் பிரன்சு நாட் டைச்சேர்ந்தவன். ஜோன் என்ன தவறிழைத்தாலும் அவள் தாய் நாட்டுக்காரி என்ற பற்று என் இதயத்தினின்றும் அழிந்து விடுமா என்ன? என் உடம்பிலே ஓடுவதும் பிரஞ்சு இரத்தந்தானே? நாடிஆடாவிட்டாலும் என் தசை ஆடாமலி ருக்குமா? விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது அவர் கள் கேட்டகேள்விகள் இதயம் படைத்தவர்களைத் தாக்காம லிராதே! என்னென்ன பேசினார்கள்! நான் விசாரணை துவக்கத்தின் போதே அவர்களுக்குத் தெரிவித்தேன், இது மதவிசாரனை மன்றம் — சிவில்கோர்ட் அல்ல என்று. நாம் இங்கே கூடியிருப்பது, ஜோன் ஒரு மதநிந்தனைக்காரி என் பதை நிரூபிக்கவே தவிர அவள் ஒரு பைசாசா — சூன்யக் காரியா என்பதை ஆராய்வதற்கல்ல என்றேன். திருப்பி திருப்பி ஒவ்வொரு தட்வையும் சொன்னேன். கொஞ்சங் கூட அந்த வெறியர்கள் அதைக்கவனிக்கவில்லை.

எத்தனை முறை விசாரணை ! கைகளிலும் கால்களிலும் விலங்கிட்டுச் சிறையிலிருந்து ஒவ்வொரு விசாரணைக்கும் ஜோனை அழைத்து வரும் போதெல்லாம், அவள் நிலையைக் கண்டு நான் கண் கலங்கியதுண்டு. ஆறு விசாரணைகள் வெளிப்படையாக—பலர் அறிய நடைப்பெற்றன. ஒன்பது விசாரணைகள் தனிமையில், பிறர்காண முடியாதபடி நடைபெற்றன.

பதினெட்டு வயது இளம் பெண். அவளது நாட்டுப் பற்று—அவள் செய்த தியாகம்—அவளது உண்மையான கடவுள் நம்பிக்கை—ஆகியவைகளை மதிக்கவில்லை அந்தக்கயவர்கள். நான் என்ன செய்யமுடியும்? நானும் விசாரணை மன்றத்தாரில் ஒருவன் தானே! நான் எவ்வளவோ எடுத்துக்கூறியும் பயனில்லை. முதன் முதலில் ஆங்கிலப்பிரபு வார்விக்கைச் சந்தித்தபோது அவர் கூறினர், "ஆங்கிலேயர்களாகிய நாங்கள் இன்று ஓர் பட்டிக்காட்டுப்பெண்ணால் தாக்கப்படுகிறோம். என்றுமே நடைபெறாத நிகழ்ச்சி. ஓடி ஒளிந்த சார்லஸ், ரீம்ஸ் நகரில் முடிசூட்டப்படுகிறான். இவற்றிற்கெல்லாம் காரணம் ஓர் பெண்" என்று.

"அவள் பெண் அல்ல. மாயப்பிசாசு. இல்லாவிட்டால் இணையற்ற வீரன் சர் ஜான் டால்பட் சிறை பிடிக்கப்படுவாரா? அல்லது நாட்டின் நாயகம் சர் வில்லியம் கிளாஸ்டேல் மாண்டு மடிவாரா? எங்களை நாசப்படுத்த வந்த நயவஞ்சகியை உயிருடன் விடுவதா", என்று அனல் கக்கினன் சாப்ளின்-டி-ஸ்டோம்ப்ர்.

"அவளைத் தீயிலிட்டுக் கொளுத்தத்தான் வேண்டும்" என்று முழங்கினன் வார்விக்.

"என்னல் அவளைக் கொளுத்த முடியாது தேவாலயம் உயிரைப் போக்குதலைத் தனது வேலையாகக் கொள்ளவில்லை.

அவளைக் காப்பாற்றவேண்டியது என் முதற் கடமை'' என்று உறுதியோடு கூறினேன் நான்.

'நீ ஒரு துரோகி' என்று அலறினான் சாப்ளின்.

'நான் துரோகியாக்கப்படலாம் — என் பணி அதைச் செய்கிறது'' ஜோன் ஆண்டவனையோ அன்றி அவரது புனிதத் தன்மையையோ குறை கூறவில்லை. ஆண்டவனுக்கு அவள் முதலிடம் தருகிறாள். ஆனால் அவள் செய்யத் தவறியது வேறு. தேவாலத்தையோ மதக்குருக்களையோ கூட அவள் நிந்திக்கவில்லை. அவர்களையும் அவள் மதிக்கத்தான் செய்கிறாள். ஆண்டவனிடமிருந்து நேரடியாகக் கட்டளைபெற்றாள் — அந்தக் கட்டளையைப் போப்பாண்டவரிடம் சொல்லவில்லை. அதுதானே அவள் செய்த குற்றம்? சொல்லாமல் நேரடியாக சார்லஸ் டாபினுக்குத் தெரிவித்து அவன் மூலம் சிதறிகிடந்த படையை ஒன்றுசேர்த்து உற்சாகப் படுத்தி ஆங்கிலேயரை விரட்டி அடித்து மன்னனுக்கு மகுடம் சூட்டினாள். ஆங்கிலேய மன்னனுக்கு வெளியேறும்படிக் கடிதம் அனுப்பினாள். அதுவரையில் அவள் செய்த மகத்தான வீரச் செயலுக்கு நாம் தலைவணங்கிப் பாராட்டத்தானே வேண்டும்.

ஆண்டவனுக்கும் அவளுக்கும் தொடர்பு இருப்பதாக நினைத்தாளே தவிர தேவாலய மதக்குருக்களிடம் அவள் தொடர்பு கொள்ளவில்லை. அது தானே, அவள் செய்த குற்றம்? அந்தக் குற்றத்திற்காக அதனைத் தீக்கிரையாக்கி விடலாமா ?

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கான்ஸ்டன்ஸ் நகரத்தில் ஹஸ் என்பவன் செய்த மதநிந்தனை பொஹிமியா நாட்டையே கலக்கிற்று. அதற்காகக்கூட அவன் முதலிலேயே எரிக்கப்படவில்லையே!

இங்கிலாந்திலே ஜான் விக்ளிப் என்ற மதகுருவே மதத்தை நிந்தனை செய்தான். அப்போது நீங்கள் அவனை வெட்கமில்லாமல் விட்டு வைத்தீர்கள். அவன் இயற்கை மரணந்தானே அடைந்தான். அவனைக் கொளுத்தவா செய்தீர்கள்?

அவர்களைப் போலத்தான் எங்கள் பிரான்ஸ் நாட்டிலே பிறந்த ஜோனும்! அவளை ஏன் கொளுத்த வேண்டும்?

அரபு நாட்டு மகம்மது ஆண்டவனிடமிருந்து கட்டளைகளை நேரில் பெற்றதாகத்தானே கூறினார். அவரைக்கூட தீயிலிடவில்லையே.

ஜோன் ஆண்டவனையோ — தேவாலயத்தையோ மதகுருக்களையோ நிந்திக்கவில்லை. அவர்களையே அவள் கவனிக்கவில்லையே. அந்தக் குற்றத்தை ஒப்புக்கொண்டு, மன்னிப்புப்பத்திரத்தில் கையொப்பமிட்டு, தேவாலயத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாளே யானால், நாம் அவளை மன்னிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இல்லையேல் என்னிடம் ஒப்படையுங்கள். நானே அவளைத் தீக்குழிக்கு அனுப்புகிறேன், என்று தீர்மானமாகக் கூறினேன்.

அந்த உறுதியின் பேரிலேயே என் தலைமையில் விசாரணைகள் நடந்தன. அன்று விசாரணையின் கடைசிநாள். ஒவ்வொருவரும் என்ன முடிவு என்று ஆவலோடு எதிர்பார்த்தனர். சாப்ளின்—லாட்வெனு—கோர்சிலஸ் முதலிய ஆங்கில மதகுருக்கள் பரபரப்போடு காணப்பட்டனர். மன்ற வாயிலில் வார்விக் ஆயுதந் தாங்கிய எண்ணூறு போர்வீரர்களை நிறுத்தியிருந்தார். தீர்ப்பை எதிர்பார்த்து ஆயிரமாயிரம் மக்கள் மன்றத்தின் உள்ளும் புறமும் குழுமியிருந்தனர். அவரவருக்குத் தோன்றியபடி யெல்லாம் வழக்கின் போக்கைப்பற்றியும் முடிவைப் பற்றியும் கூறிக் கொண்டிருந்தனர்.

விசாரணை ஆரம்பமாகும் நேரம் வந்தது. மன்றத்தில் அமைதி நிலவியது. விசாரணைக் குழுவினர் எல்லோரும் அவரவர் இடத்தில் அமர்ந்தனர்.

ஜோன் அழைத்துவரப்பட்டாள். கைகால்களில் சங்கிலி பூட்டப்பட்டு, கால் சங்கிலி மரக்கட்டையோடு பிணைக்கப்பட்டிருந்ததால், அவள் அந்தக் கட்டையையும் இழுத்துக்கொண்டு மெதுவாக நடந்து வந்தாள், கருப்பு ஆணுடை தரித்திருந்தாள். அவள் இளைத்தும் களைத்தும் இருந்தாள். இரத்தமற்று உடல் வெளுத்து காட்சியளித்தது. அவளைப் பார்க்கவே எனக்கு வருத்தமாக இருந்தது. அந்த நிலையிலும் அவளது கண்கள் வீர ஒளியைச் சிந்திக் கொண்டிருந்தன. அவள் கேட்ட கேள்விகள் உண்மையிலேயே என் மனசாட்சியை ஈட்டியாலே குத்துவதுபோல் உணர்ந்தேன்.

அவளது நிலையைக்கண்ட விசாரணைக் குழுவினர் அவளிடம் அன்பாகத்தான் நடந்துகொண்டனர். அவளது வாடிய மேனியைக் கண்டு 'ஜோன்' ஏன் கவலையோடு காணப்படுகிறாய் ? உனக்கு ஒன்றும் நேராது என்று ஆய்வுக்காரர் கனிவுடன் கூறினர்.

''ஆங்கிலேயர்கள்— ஒரு சூனியக்காரியாகிய நான் கொளுத்தப்பட வேண்டுமென்ற தீர்மானத்திலே விரைந்து விட்டார்கள். நான் பைத்தியம் எனக்கருதி அதனைத் தெளிவிக்க டாக்டர்களை வேறு அனுப்பிவைத்தார்கள். எனது உடம்பிலுள்ள இரத்தத்தை வெளியேற்றுவதன் மூலம் என்னைக் குணப்படுத்த முடியுமென்று அந்த அற்பர்கள் கருதிக் கொண்டார்கள். நான் அவர்களை அனுமதிக்கவில்லை! ஏன் என்னை அந்த ஆங்கிலேயரின் கரங்களிலே ஒப்படைத்தீர்கள்? என்னை தேவாலயத்தின் கரங்களிலே ஏன் ஒப்படைத்திருக்கக் கூடாது? ஏன் எனது கால்களிலும் கரங்

களிலும் விலங்குகள்? அதிலும் சங்கிலிகள். நான் பறந்து விடுவேன் என்று கருதுகிறீர்களா? அதற்காகத்தான் எண்ணூறு போர்வீரர்களைக் காவல் வைத்திருக்கின்றீர்களே. அவ்வளவு அச்சமா?" இந்தக் கேள்விகளை அவள் சாவதானமாகத்தான் கேட்டாள். எனக்கோ அவைகள் இடியோசைசைப் போல் கேட்டது. அவள் யாருக்கும் அஞ்சியதாகவே தெரியவில்லை.

"நீ மாயக்காரி—பிசாசுகளுடன் தொடர்பு கொண்டவள், தேவாலயத்தின் எதிரி, உன்னைச் சித்திரவதை செய்ய வேண்டும்." என்று முழக்கமிட்டான் கோர்சிலஸ்.

ஆங்கில நாட்டில் தூய காத்தரினும். தூய மார்கரெட்டும் தூய மைக்கேலும் பிசாசுகளோ? என்று வெடுக்கென்று திருப்பிக் கேட்டாள். "அவர்கள் ஆடை உடுத்திருந்தார்களா?" என்ற கேள்விக்கு "ஏன் ஆண்டவனால் அவர்களுக்கு ஆடை தரமுடியாது என்பது தங்களின் கருத்தோ?" என்று குத்தலாக பதில் சொன்னாள். கோபத்தால் அவன் முகம் சிவந்தது. "நீ புனித மார்கரெட்டோடு பேசியதாகக் குறிப்பிட்டாயே அப்போது எந்த மொழியிலே மார்கரெட் உன்னோடு பேசினார்" என்று ஏதோ கேலி செய்பவனைப் போல ஒரு கேள்வியைக் கேட்டான் இன்னொரு விசாரணைக்காரன்.

"உன் பேச்சைவிட அழகான, சுத்தமான பிரஞ்சு மொழியில்" என்று இருமாப்போடு பதிலிறுத்தாள். "ஜோன், பிஷப்பின் குதிரையைத் திருடியிருக்கிறாள்" என்று முட்டாள்தனமாக கோர்ஸிலஸ் என்னும் ஆங்கில நாட்டான் ஓலமிட்டான். "இது போலீஸ் மன்றம் அல்ல, மதவிசாரணைக் கூடம்" என்றேன் நான் குறுக்கிட்டு. "சதாரணக் குதிரையானாலும் பரவாயில்லை - இதுவோ பிஷப்பின் குதிரை—பிஷப் செனிலஸின் குதிரை"—என்று தொடர்ந்தான்.

இந்தப் பெண்ணைப் பற்றிய தகவல்கள் தெரிந்து கொள்ளச் சிலரை லொரேய்ன் மாகாணத்திலுள்ள டோம்ரெமி கிராமத்திற்கு அனுப்பினேம். வந்தவர்களெல்லாம் அவளைப் பற்றி நல்ல கருத்துக்களைத்தான் தெரிவித்தனர்'' என்றேன். எவ்வளவு துணிச்சலோடு அவன் அப்போது சொன்னுன், ''இந்த மன்றத்தையே ஜோன் தன் செல்வாக்கினுல் சொந்த மாக்கிக் கொண்டாள்'' என்று!

மேலும் தொடர்ந்து கேட்ட கேள்விகளுக்கு ''என் உடலைத் துண்டு துண்டாகச் சிதைத்தாலும் என்னிடமிருந்து அவசியத் திற் கதிகமான எதையும் நீங்கள் பெற முடியாது. என்னைத் தொல்லைப் படுத்த வேண்டாம்'' என்று ஜோன் தீர்மானமாகக் கூறிவிட்டாள். அந்த வார்த்தைகள் நீதி மன்றத்தையே திடுக்கிட வைத்தது. இதற்கிடையில் ஒவ்வொரு முறையும் அந்தக் கோர்ஸிலஸ் அர்த்தமற்றக் கேள்விகளை மூட்டாள் தனமாக கேட்டுக் கொண்டே இருந்தான்.

''நீ என்ன முட்டாளா ?'' என்று அவனைப் பார்த்து ஜோன் கேட்ட பயமற்ற கேள்வி மன்றத்திலே பலத்த சிரிப்பை மூட்டிற்று. ''உண்மையிலே நான் முடடாள்தான்'' என்று கோர்ஸிலஸ் கூறி உட்கார்ந்தபோது—மன்றமே அதிரும்படியான சிரிப்பொலி எழுந்தது.

''உன்னை ஒத்த பெண்களைப்போல் நீயும் பின்னல் வேலை செய்து கொண்டு ஒழுங்காக இருக்கலாமே—உனக் கேன் இந்தத்தொல்லை''. என்றுர் ஒரு தேவாலய அதிகாரி.

''அதற்கு ஏராளமான பேர்கள் இருக்கிறுர்கள். ஆனுல் நான் ஈடுபட்டிருக்கும் பொறுப்பை ஏற்று நடத்தத் தான் ஒரு வருமில்லை'' என்று கூறி வாயடைத்தாள்.

அதிகாரி அழகாக உட்கார்ந்து கொண்டார்! முகத்தில் ஈயாடவில்லை!

ஏன் இன்னும் ஆணுடை தரித்துக்கொண்டிருக்கிறாய்? என்று வேறொருவர் கேட்டார் "ஏன்? உங்கள் வார்விக் சிறையிலும் என்னுடன் நான்கு போர்வீரர்களை இரவும் பகலுமாகக் காவல் வைத்திருக்கிறீரே—நான் பறந்து விடுவேன் எனக்கருதி! அவர்களுடன் நான் பாவாடையுடன் இருக்க வேண்டுமென்பது தங்கள் விருப்பமோ" என்று வெறுப்புடன் பதிலளித்தாள்.

அதற்குப் பிறகு மன்றத்திலே ஜோனிடம் கேள்விகளைக் கேட்கவே அனைவரும் அஞ்சினர். கடைசியாக "நீ தேவாலயத்தை எதிர்த்துச் செல்கிறாய்!" என்று நான் அவளைக் குற்றம் கூறியபோது,

"இல்லை பிரபோ! நான் தேவாலயத்தின் நம்பிக்கைக்குரிய குழந்தை—அதற்குக் கட்டுப்படுகிறேன். ஆனால் செய்ய முடியாததையும்—கூடாததையும் கோயில் என்னைச் செய்யும்படி கட்டளையிடக் கூடாது" என்றாள்.

நீ தேவாலயத்திற்கு கட்டுப்பட்டவள் என்பதை ஒப்புக் கொள்ளுகிறாயா? என்று மார்டின்லாட்வெனு கேட்டார். எப்போதாவது மறுத்ததுண்டா? என்றாள் ஜோன். அப்படியானால் நீ போப்பாண்டவர்—பாதிரிகள் — மதகுருக்கள்— ஆர்ச்பிஷப்புகள் — இவர்களுக்கெல்லாம் கட்டுப்பட்டவள் தானே! என்றார் அவர்.

"இருக்கலாம்—எனக்கு முதலிலே ஆண்டவன்—அதன் பின்னரே இந்தப் பரிவாரங்கள் எல்லாம்" என்றாள் அவள் லாட்வெனுவின் கேள்விக்கு ஜோன் அளித்த பதில் அவளது விடாப்பிடியையும் உறுதியையும் தெளிவாகக் காட்டிற்று.

அவள், ஆண்டவனின் அடியாளே தவிர அதற்காகப்போராடும் தேவாலய குருக்களின் அடிமையல்ல என்பதை உறுதியோடு கூறினுள். இறுதியாக குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்கும் பத்திரத்தில் கையொப்பமிட்டால் நீ தப்புவிக்கப் படுவாய் என்று மதவிசாரணைக்காரர் கூறினர்.

அவளும் அதற்கிசைந்து மதகுரு மார்டின் லாட்வெனுவின் உதவியுடன் பத்திரத்தில் கையொப்ப மிட்டாள். விசாரணைக்காரர் நீ செய்த மதத்துவேஷம் என்ற பெருங்குற்றத்திற்கு மன்னிப்புக்கேட்டுக் கொண்டதனுல் மீண்டும் நீ இது போன்ற தவறுகள் செய்யமாட்டாய் எனக்கருதி உன்னை எரிக்காமல் விடுகிறோம். ஆனுல் இறக்கும் வரையில் நீ 'துக்கம்' எனும் ரொட்டியை உண்டு 'துயரம்' எனும் நீரைப்பருகிச் சிறைவாசம் செய்யவேண்டும் எனத் தீர்ப் பளித்தார்.

அந்தத்தீர்ப்பு அவளைத் திடுக்கிடச்செய்தது. இடியுண்ட நாகம் போல் சீறினுள். ஆத்திரத்தால் அவள் உடல் நடுங்கியது. கோபங்கொண்ட அவள் பாய்ந்து வந்து என் மேஜைமீது கையெழுத்திடப்பட்டு வைத்திருந்த பத்திரத்தைக் கையிலெடுத்து சுக்கு நூருகக் கிழித்தெறிந்துவிட்டாள்.

என் ஆசை எல்லாம் அவளைத் தப்பவைக்க வேண்டுமென்பதுதான். அந்தப் பரிதாபத்திற்குரியவளால் என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வெளிப்படையாக அதுவும் விசாரணை மன்றத்தில் பத்திரத்தை கிழித்தெறிந்து விட்டு— மன்றத்தில் கூடியிருந்த மத குருக்களையும் - அறிஞர்களையும் அலட்சியஞ் செய்துவிட்ட பிறகு எனக்கு வேறு வழியில்லை. நான் என்ன செய்ய இயலும்? ஏற்கனவே ஆங்கில நாட்டு வார்விக் என்னைச் சந்தேகித்து விட்டான். இறுதியிலே உடைந்து போன உள்ளத்தோடு நான் தீர்ப்பு எழுதிவிட்டேன்.

ஜோனைக் காத்து நின்ற ஆங்கில வேங்கைக்கு இறையாகத் தந்து விட்டேன் !

"சூன்யக்காரி ! மதத்துவேஷி ! தேவாலயத்தின் எதிரி ! பொசுக்குங்கள் அவளை !" என்று ஏக காலத்தில் எல்லோரும் கூவினர்.

இரையைக் கண்ட நரிகளைப்போல் எல்லோரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர். அவள் பரபரவென்று இழுத்துச் செல்லப்பட்டாள்.

இந்தக் காட்சி என் மனதை உருக்கிற்று. என் உடல் பதறியது. கண்ணீர் என் பார்வையை மறைத்தது. பெரு மூச்சு விட்டுப் பொருமினேன். போர் வீரர்களும் விசாரணைக் குழுவினரும் அவளைத் தொடர்ந்து சந்தை வெளிக்குச் சென்றனர். அங்கு ஒரே ஆரவாரம். அவர்கள் என்னையும் அழைத்தார்கள் 'நான் அதுபோன்ற கொடுமையை கண்டு பழகியவன் அல்ல' என்றுமறுத்துவிட்டேன். ஜோன்வெள்ளை அங்கிஉடுத்தியிருந்தாளாம். கம்பத்தோடு சேர்த்து இரும்புச் சங்கிலிகளால் குறுக்கும் நெடுக்குமாக இழுத்துக் கட்டினார்களாம். வண்டி வண்டியாக விறகு சுள்ளிகள் மலைபோல் குவிக்கப்பட்டிருந்ததாம். அவளை எரிக்க விறகு போடுவதிலே எத்தனை வெறியர்கள் மகிழ்ந்தனரோ ! ஆத்திரக்காரர்கள் மூட்டிய தீ வானளாவிப் பற்றி எரிந்ததாம்.

'ஒரு சிலுவை கொடுங்கள்' என்று கேட்டாளாம் ஜோன். இரு குச்சிகளைப் பிணைத்துக் கொடுத்தானும் ஒரு ஆங்கிலேயன். அதை முத்தமிட்டு மார்புடன் அணைத்துக் கொண்டாளாம்.

"ஏசுநாதரே" என்று அவளது உதடுகள் முனகினவாம்.

'அந்த ஒரு சிறு உதவியைக் கூட நான் செய்யத் தவறினேனே பாவி' என்று தன்னையே நொந்து கொண்டாலும், ஒரு

ஆங்கிலேயன் அதைச் செய்ததிலே திருப்தியுமடைந்தான். சாப்ளின் - டி - ஸ்டோம்பர். (ஜோனின் எதிரிகளில் ஒருவன்,) எரிந்து கொண்டிருக்கும் ஜோன் சிலுவை கேட்டாள் என்பதற்கு தேவாலயச்சிலுவை ஒன்றை தீயின் (ஜ்வாலை) பிழம்புகளின் இடையே காணும்படி அவளுக்குக் காட்டினனும் மற்ருெரு பகைவனை மார்ட்டின் லாட்வெனு. அந்த நேரத்திலும் தனக்குச் சிலுவை காட்டுகிறவன் எதிரியாயிருந்துங்கூட அவன் எரியும் நெருப்பில் விழுந்துவிடக் கூடாதே என்று அவனைத் தள்ளிப் போகும்படி எச்சரிக்கை செய்தாளாம் அந்தத் தியாகவல்லி ஜோன்.

பின்னல் அந்த இளம் புரட்சிப் பெண்ணின் அழகிய பொன்னுடலைச் சந்தையிலே ஆங்கிலேயர் வளர்த்த தீ கருக்கிற்று! ஜோன் எரிக்கப்பட்டாள்! ஆம் சாம்பலானள்! இதோ மனித சமூகத்தின் சார்பிலே - நீதி நேர்மையின் சார்பிலே அவளுக்கு எனது இறுதி வணக்கம். வழிந்தோடுகின்ற கண்ணீர்த் துளிகள் எனது காணிக்கை யாகட்டும்!

வாழ்க ஜோன்! எனவாழ்த்துகிறேன்!

# காலம் பேசுகிறது !

## 1412—1920

எத்தனையோ மாற்றங்களை நான் இந்த வையத்திலே சந்தித்திருக்கிறேன்! அச்சத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கும் மாறுதல்களைப் பார்த்துப் பார்த்துச் சலித்துவிட்டேன்! மேடும் பள்ளமும், எழுச்சியும் - வீழ்ச்சியும், உயர்வும் - தாழ்வும் ஒன்றன்பின் ஒன்றாக அணி நடைபோடுகின்றன. அழிப்பதும் அழிக்கப்படுவதும், வாழ்வதும்-விழ்வதும் உலகத்தின் தவிர்க்க முடியாத இயற்கைவிளைவுகள். கறையேறிய நூற்றுண்டுகளைச் சந்தித்து நடுங்கிய நான் பல சந்தர்ப்பங்களின் சந்நிதானத்தில் அமர்த்தப்பட்டு மிருக்கிறேன்.

மனித சமுதாயம் எத்தனையோ பலவித மனிதர்களைக் கொண்டது. ஊர் எப்படியோ கெட்டழியட்டும்-தாம் வாழ்ந்தால் சரி என்ற " உயர்ந்த உள்ளம் " கொண்டவர்கள் ஒரு சாரார். எதிர்ப்பு என்றால் காத தூரத்திலே நிற்பார்கள். "நமக்கேன் அந்தச் சனியன்" என்ற நினைப்பு அவர்களது தாரக மந்திரம். பிறருக்கு உதவுகின்ற 'குறுகியபுத்தி' கூடாது என்ற மனப்பான்மையில் ஊறித்திளைத்தவர்கள்! எரிகின்ற வீட்டின் தீயணைக்கும் " கீழ்த்தர முயற்சியிலும் " ஈடுபடுவதில்லை தங்களால் ஆன உதவியாக இருக்கட்டுமே என்று கொஞ்சம் பெட்ரோலை ஊற்றி மேலும் எரியவிடும் உயர்ந்த செய்கையும் செய்வதில்லை. இவர்கள் ஒருவிதம்.

" நேற்றுவரை பிச்சைக்காரனுகத்தானே வாழ்ந்தான் " இன்று அவனுக்கு மூன்று அடுக்கு மாளிகை-எடுபிடிவேலையாள் எட்டுபேர் - விதவிதமான கார்கள் நான்கு! இப்போது எத்தனை

முறை வேலேக்காரன் தெண்டனிடுகிருன். வீட்டு வாயிலி லேயும் வரிசையாக நிற்கும் கார்கள் பல. வாசலிலே மாலே நேரமானுல் எத்தனே கனவான்கள் - சீமாட்டிகள் விஜயம்; ஐயாவை—பேட்டி காண்பதற்காக; எல்லாம் வார்டைம் பிஸினஸ் -அப்பப்பா-இது நிலேக்காது—ஆண்டவனுக்கே அடுக் காது ! "ஆண்டவனே முட்டாளாக்கி—ஏவலாளியாக்கி என் தனது தரகனுகக் கூடப்பணித்து—சமுதாயத்தின் வளமான ஒரு பகுதியை வனுந்தரமாக்கித் தனது வாழ்வைப் பெருக்கிக் கொண்ட உலுத்தர்கள் ! பிறருல் 'கருணுமூர்த்தி' என்ற சர்டி பிகேட் பெறும் திடீர் பணக்காரர்கள். இது ஒரு விதம்.

கால் பிடித்து வாழும் கலேயிலே உயர்ந்த 'டிகிரி' வாங்கு பவர்கள் இன்னெருவகை! அவர்கள் நன்ருக வளேபவர்கள்! நின்ருடும் உடல்படைத்தவர்கள் தண்டனிடும் பயிற்சி அவர்க ளுக்கு இயற்கையிலே அமைந்திருக்கும். எதற்கும் நன்ருகச் சிரிப்பார்கள்! பாதந்தாங்கிகள். விளக்குமாறு வேகமாக முகத் திலே தாக்கும் போதும், அதைப் பயன்படுத்துகிற கை பத்து விரல்களிலும் மோதிரமணிந்திருக்குமானுல், சிந்துகின்ற இரத் தத்தை வழித்துவிட்டு பிரகாசமான புன்னகயை வரவழைத்துக் கொண்டு, மோதிரக்கையை வருடி, அதற்கு வலித்திருக்குமே என்பதற்காக வருத்தப்படுபவர்களாகக் காட்டிக் கொள்ளும் 'தன்னலம் பேணுப் பிறர்க்குரியாளர்கள்' இவர்கள், எந்தத் தொழிலேயும் செய்வார்கள். தன்மானம் — சுயமரியாதை; அந்தத் "தேவையற்ற பண்பாட்டை" புதைக்குழிக்கு அனுப்பி அங்கே 'மயானபிரசங்கம்' நடத்துபவர்கள். 'மனசாட்சி'என் கிருர்களே அது எந்தக் கடையிலே கிடைக்கும் என்று நகைச் சுவை எழுப்பும் நடிக மன்னர்கள்.

பைத்தியக்காரத்தனமாக — மனசாட்சி தன்மானம் — கொள்கை—குறிக்கோள்—இலட்சியம் கடமை, நேர்மை என்ற

'அனுவசியமான' வார்த்தைகளிலே தன் உள்ளத்தையே பறி கொடுத்து — மானம் போகுமென்றால் உயிரும் போயிற்று என்று கதறும், கவரிமான் மனம் படைத்த பரிதாபத்திற் குரியவர்கள் மற்றொரு வகையைச் சேர்ந்தவர்கள், இவர்கள் கற்றூண்கள் மாதிரி! வாழ்க்கையிலே வளையாதவர்கள்! எதிர்ப்பினால் இரண்டு துண்டானாலும் ஆவார்களே தவிர குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும் "டிப்ளமசி" தெரியாதவர்கள்! நாடு - கலை - கலாச்சாரம் - உரிமை - பேச்சுச் சுதந்திரம் - விடுதலை என்பவைகளிலே இவர்கள் முதலை போன்றவர்கள்! விடாப்பிடியானவர்கள். ஒரு வகையிலே இவர்கள் மூர்க்கர்கள்தானே! தம் உயிரைப்பற்றிக் கவலையற்ற அப் பாவிகள்! இவர்கள் மனித சமுதாயத்தில் மிக்க பரிதாபத்திற் குரியவர்கள். இவர்கள் எதிர் நீச்சுக்காரர்கள்! சூருவளியைப் பற்றிக் கவலையற்றவர்கள்! நெடுமரம்போல் நிமிர்ந்து நின்று பழக்கப்பட்டவர்கள்! புன்னகை பூத்திடத் தெரியும் — பல்லைக் காட்டத் தெரியாது. இவர்களுக்கு மட்டும் கொஞ்சம் **டாக்டிக்ஸ்** தெரிந்திருந்தால் எவ்வளவோ நல்ல காரியங்களை தங்கள் மனைவி மக்கள், உற்றார் உறவினர்களுக்குச் செய்திருக்க முடியும்?—இவர்களைப் பார்த்து அய்யோ! வாழத் தெரியாதவர்களே! என்று கண்ணீர் விடுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எப்படியோ இலகுவாக - உடலை நன்றாக வளைக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ரகங்கள் ஏராளம். கடைசியிலே குறிப்பிட்ட இலட்சிய முதலைகளின் ரகத்தைச் சேர்ந்தவள்தான் 'புரட்சிப் பெண் ஜோன்' இந்த ரகத்தினர்தான் ஒரு நாட்டின் வரலாற்றை உலகின் வரலாற்றையே உருவாக்குபவர்கள். ஏனைய மக்களால் வரலாறு உருவாகியதில்லை - அவர்கள் தம் தனி வாழ்வு உருவாகியிருக்கிறது! ஒரு தனி மனிதனின் வரலாறு ஒரு

நாட்டின் வரலாறு அல்லதான். ஆனல் ஒரு தனி மனிதனின் சரிதம் அவன் வாழ்க்கைச் சம்பவங்களின் படப்பிடிப்புகள் ஒரு நாட்டின் வரலாற்றிலே ஏராளம் காணலாம். ஒரு தனி மனிதன் வரலாற்றின் 'காரண கர்த்தனுக' இல்லாவிட்டாலும் அவன் வரலாற்றின் 'கதா நாயகனுக' அமைகிருன்.

அவனது செயல் நாட்டின் வரலாற்றையே பெருமளவு பாதிப்பதுண்டு! ஒரு தனி மனிதனுலே உருவாகி வந்த வரலாறுகள் பாதை மாறி வேறு திசைகளில் சென்றதும் உண்டு. ஒரு நாட்டின் அரசியல், சமூகப் பொருளாதார போக்குகளிலே தனி ஒருவன் ஏற்படுத்திய மாறுதல்கள் எவ்வளவு? அதன் விளைவாக அந்த நாட்டின் வரலாற்றுப் போக்கே மாறியிருக்கிறது. சந்தர்ப்பங்களும் - சூழ்நிலைகளும் தட்ப வெப்ப நிலைகளும் ஒரு நாட்டின் வரலாற்றை உருவாக்குவதிலே முன்னணியிலே நிற்கின்றன. ஒன்ருேடொன்று இணைந்தும் பிணைந்தும், அதன் விளைவிலே உருவாகும் புதுமைகள் மனிதனுடைய எண்ணத்திலே ஏற்படும் புதுப்புதுக் கருத்துக்களால் நாட்டிலே ஏற்படும் மாற்றங்கள் - வளர்ச்சிகள் - முற்போக்குகள்தான் வரலாற்றுக்கு அடிப்படையாகும். அவைகளேதான் ஒரு நாட்டின் வரலாருக அமைகின்றன.

எதையோ சொல்லவந்த நான் எங்கேயோ சென்றுவிட்டேன். வரலாற்றின் பகுதிகள் ஒதுக்கியுள்ள ஒரு சில அத்தியாயங்கள் நம் கண்ணீரைக் காணிக்கையாகக் கேட்கின்றன. காரணம் ஏற்கெனவே நான் குறிப்பிட்ட சமுதாயத்தின் கடைசி ரகத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்த அத்தியாயங்களிலேதான் புதைக் குழி தோண்டியிருக்கிருர்கள். இங்கே நான் உங்களை அழைத்துச் செல்ல விரும்புமிடம் பிரஞ்சு நாடு. அந்த நாட்டின் வரலாற்றிலே ஓர் பகுதி, கறைபடிந்த பகுதி. பல புதை குழிகளிலே அதுவும் ஒன்று. அங்கேதான் எதிர்க்கமுடியாத

சக்தி - அசைக்க முடியாத தடைக்கல்லை மோதிற்று! மூண்டது மாபெரும் தீ! அந்தத் தீ! பரிதாபத்திற்குரிய 'ஜோன்-ஆப்-ஆர்க்' என்ற பிரஞ்சு நாட்டு கிராமப் பெண்ணை பொசுக்கிற்று! அங்கேதான் இடைக்காலத்தின் இருண்ட எண்ணங்கள் வளையமிடுகின்றன. வரலாறு வேதனையை வாரி வழங்குகிறது.

1412ஆம் ஆண்டு பிறந்த ஜோன்-ஆப்-ஆர்க் சூன்யக்காரி மதத்துவேஷி என்பதாகத் தன் நாட்டையே சார்ந்த பிஷப் பீட்டர் காக்கன் என்பவரால் தீர்ப்பளிக்கப்பட்டு 1431ஆம் ஆண்டு தீயிலே கொளுத்தப்பட்டாள்.

## 25 ஆண்டுகளுக்குப் பிறகு
### (1456-ம் ஆண்டு)

ஜோன் எரிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நகர்ந்து விட்டன. நரைத்துத் திரைத்துப் பழமாகிவிட்ட ஜோனின் தாய் இசயெல் ரோமி பிஷப்காக்கனின் தீர்ப்பை எதிர்த்து அன்றைய போப்பாண்டவருக்கு விண்ணப்பம் செய்துக்கொண்டாள். போப் உண்மையை ஒத்துக் கொண்டார். பிஷப்காக்கனின் தீர்ப்பு ரத்தாக்கப்பட்டது. இறந்துவிட்ட அவனது உடல் புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு சாக்கடையில் வீசப்பட்டது, உணர்ச்சி கொண்ட நாட்டு மக்கள் சிலரால், அந்த வகையில் அவனைப் பழிதீர்த்துக் கொண்டனர் போலும்! ஜோனின் தூய தியாகத்தை அவளது இதயத்தை உலகம் கண்டுகொண்டது! சூன்யக்காரி, மதத்துவேஷி என்ற கொடிய வசைகள் இப்போது அவள் மீது வீசப்படவில்லை. இப்போது அவள் **பிரஞ்சுப் பெண் ஜோன்** என்று எல்லோராலும் போற்றப்படுகிறாள், அவளது புகழ் **புதுவாழ்வு** பெற்று நிலைத்துவிட்டது.

# ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு

ஆண்டுகள் ஐந்நூறு உருண்டோடிவிட்டன! ஜோனை நான் மறக்கவில்லை. வரலாறு அவளுக்கென்று தனியாக ஒளி வீசும் பக்கங்களை ஒதுக்கி வைத்தது!

1904 ம் ஆண்டு அவள் புகழுக்குரியவளாக்கப்பட்டாள்.

1908 ம் ஆண்டு அவள் ஆசீர்வதிக்கப்பட்டவளானாள்,

1919 ம் ஆண்டு போப் பெனடிக்ட் XV பிரஞ்சுப் பெண் ஜோனுக்கு கத்தோலிக்க ஆலயத்தில் புனித ஆண்டவர் பலரின் நடுவிலே உயரிய இடம் கொடுத்தார்! ஜோன் ஒரு புனித மங்கையானாள். தெய்வீகத் திரைகளால் ஜோன் மூடப்பட்டு விட்டாள்! இப்போது அவள் **புனிதப் பெண் ஜோன்.**

சாதாரண மங்கை! அசாதாரண திறமைகளால் வரலாற்றிலே புகழிடம் பெற்றுவிட்ட ஜோன் கத்தோலிக்க ஆலயத்தில் அமர்த்தப்பட்டாள்! புனித மங்கையாகவும் போற்றப்பட்டாள். சாக்ரடீசைப்போல் — மார்டின் லூதரைப்போல் வரலாற்றிலே மட்டும் வாழவேண்டிய ஜோன் - மதக் குருக்களின் சுவடியிலே இப்போது இடம் பெற்றுவிட்டாள். தான் கொண்ட தவறுன கருத்தை மாற்றிக்கொள்ள, ஐந்நூறு ஆண்டுகள் எடுத்துக்கொண்ட, மத உலகைப் பார்த்தும், அது தனக்குத் தந்த 'புனிதத் தன்மையை' நோக்கியும் ஜோன் சிரிக்கிருள் வரலாறு மூலம். ஆம், அவள் வரலாற்று ஏட்டிலே என்றென்றைக்கும் சிரித்துக்கொண்டேயிருப்பாள்!